www.padippakam.com

# வெகுஜனம்

ஜனம்-4 ஏப்ரல்-மே 1991 குரல்-1





படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

THOONDIL

# தமிழ்நாட்டில்
# ராஜீவ் காந்தி படுகொலை.



இந்திரா காந்தியின் படுகொலையை அடுத்து இந்தியாவின் பிரதமராக ஐந்து வருடங்கள் பதவி வகித்தவரும் இந்திரா காங்கிரஸின் தலைவருமான பெருந் ராஜீவ் காந்தி 21.05.1991. அன்று இந்தியாவின் பொதுத்தேர்தலுக்கான பிரச்சாரத்திற்காக தமிழ் நாட்டில் கலந்து கொண்ட கூட்டமொன்றில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இந்திய உப கண்ட அமைதியில் அக்கறையுள்ளவராக இருந்த ராஜீவ் காந்தி அணி சேரா நாடுகள் உடனான இந்தியாவினூடாக தனது பங்களிப்பையும் செலுத்தினார் இலங்கைத்தீவில் தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கும் இந்து சமுத்திரப் பிராந்திய அமைதிக்குமாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் படுத்த ஆர்வம் காட்டினார்.

இந்த அமைதிக்கான அணுகுமுறைகளின் பின் விளைவாகவும், பிராந்திய அமைதிக்கு விரோதமான உலக ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளின், கைக்கூலிகளின் தளமாக மாறிவருகின்ற தமிழ் நாட்டில் திட்டமிட்டு இப்படுகொலை நடாத்தப்பட்டுள்ளது.

www.padippakam.com




ஸ்ரீ லங்கா இனவெறி அரசின் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான பாசிசப் பயங்கரவாதங்களுக்கு அனுசரணையாக அனுசுரணங்கள் அதிகரித்து வருகின்றன. அரசியல் வறுமையுள்ள புலிகளின் அர்த்தமற்ற நடவடிக்கைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசபயங்கரவாதத்திற்கு துணை போகின்றன. தட்டிக்கேட்க ஆளில்லாத அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளிகளும் உலகில் எங்கே கந்தகப் புகையை கலக்கவிடலாம் என்றும், அதனூடே ஆயுத விற்பனை செய்து குளிர்காயலாம் என்று வெறி பிடித்தவர்களாக அலைந்து திரிகிறார்கள்.

அகோர ஆயுதப்பசியில் இருக்கும் ஏகாதிபத்திய கைகட்டி சேவகர்களான ஸ்ரீலங்காஅரசும், புலிகளும் ஏகாதிபத்தியத்துக்கு தமது சேவையை செவ்வனே செய்து வருகிறார்கள். அதன் உச்சக்கட்ட நன்றிக்கடனாக இந்தியாவினுள்ளும் குழப்பல் வாதிகளுக்கு கூடுதல் ஆயுத விற்பனை செய்ய வழி சமைத்துக்கொடுத்துள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்கள் மானுட நேயத்தை, மனித சகஜவாழ்க்கையை தொலைத்துவிட்டு விழி பிதுங்குகிறார்கள். இலங்கை அரசு உள்ளூராட்சி தேர்தல் என்று வழமையான குழறுபடிகளினூடாக நாடகத்தை அரங்கேற்றி தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையைத்தீர்க்க மக்கள் அதிகாரம் அளித்துள்ளதாக அரற்றிக்கொள்கிறது. இதன் விளைவு, புலிகளின் அரசியல் சாணக்கியமற்ற நடவடிக்கைகளை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு புலிகளை அழிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு கூடுதலான இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு மக்கள் கொன்றொழிக்கப்படுவார்கள், அகதிகளாக்கப்படுவார்கள், அனாதைகளாக்கப்படுவார்கள். மக்கள் வெளியேறும் பிரதேசங்கள் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களாக்கப்படும். பரந்து வாழ்ந்த பாலஸ்தீன மக்கள் சியோனிஸ்டுகளின் பாசிச நடவடிக்கைகளால் காசா ஆற்றங்கரைக்குள் ஒடுங்கிப்போனது போல் தமிழ் பேசும் மக்கள் குடாநாட்டுக்குள் குறுகிப் போவார்கள். ஏகாதிபத்திய முகாம்களில் பயிற்சி பெற்றுவிட்டு அவர்கள் கொடுத்த இலவச, விற்பனை ஆயுதங்கள் மூலம் இனவெறி அரசு தனது அட்டகாசங்களை பூமியிலிருந்து, ஆகாயத்திலிருந்து, கடலிலிருந்தும் அதிசயமாக நிகழ்த்திக்காட்டும். அதே ஏகாதிபத்திய முகாம்களில் பயிற்சி பெற்றுவிட்டு ஆயுதங்களை வாங்கி அமெரிக்க டொலரின் நாணய மதிப்பு உயர உதவி புரியும் புலிகள் போராட்டம் என்று சொல்லி பெரும் கதை புனைந்து வீரதீரங்கள் புரிவர். நடுவில் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பாய், இருபக்கமும் அடிபட்டு மிருதங்கமாய் தங்களைக் காத்துக்கொள்ள ஓடி ஒழிய இடமில்லாமல் ஆடிப்போவர்.

இந்தியாவில் நடைபெற்ற தேர்தலால் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு ஒரு நெருக்கடி ஏற்படலாம் என்று பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ராஜீவ் காந்தி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உண்டென்றும், அதனால் தனக்கு பல தொல்லைகள் ஏற்பட


படிப்பகம்

www.padippakam.com

லாம் என்றும் பிரேமதாசா பயந்து கொண்டிருந்தார். ஆனால் அப்படி எதுவுமே நிகழாமல் ராஜீவ் காந்தியையே படுகொலை செய்து பிரேமதாசாவின் பயத்தை புலிகள் போக்கிவிட்டனர். ராஜீவ் காந்தியின் படுகொலையானது புலிகளின் ஆயுத கலாச்சாரத்தை தொடரவும், பிரேமதாசாவின் தமிழ் இனப்படுகொலையை அச்சமின்றி நிகழ்த்தவும், இந்தியாவில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தவும், உப கண்ட அமைதி குலையவும் தமிழ் நாட்டில் இலங்கை தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக தஞ்சம் புகமுடியாமல் போவதற்கும் வழி வகுத்துள்ளது.

ராஜீவ் காந்தியின் இலங்கை இந்திய ஒப்பந்த நடைமுறை ஆரம்பமே பிழைத்துப் போனது. புலிகளின் உண்மை முகம் புரியாமல் பொய் முகத்தை நம்பி ஏமாந்து போனார். அதன் விளைவு புலிகளால் தோற்றுவிக்கப்பட்ட யுத்தத்தில் இராணுவம் ஏற்படுத்திய அழிவுகள், பிழைகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. இறுதியாக ஒப்பந்தத்தில் கூறிய உறுதி மொழிகள் முடிக்கப்படாமலேயே அகப்புற நெருக்கடிகளால், நிர்ப்பந்தங்களால் இராணுவத்தை திருப்பி அழைத்துக் கொண்டார். இவரின் ஒப்பந்தம் தோல்வியை தழுவியமைக்கு இவர் நம்பிக்கை வைத்திருந்த புலிகளே பெரும் பங்காற்றினர். இதன் மூலம் புலிகள் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கவிருந்த அரசியல் உத்தரவாதங்களை, ஆயுதங்களை இல்லாமல் செய்ததோடு பெரும் அழிவுகளை ஏற்படுத்தினர். இதன் உயர்ந்த கட்டநிலையாக மூன்று மாதம் கூடிக்குலாவியிருந்தபோது மக்களால் போற்றப்பட்ட அமைதிப்படையை தமிழ் பேசும் மக்களின் எதிரிப்படையாக்கி அனுப்பிவைத்த பெருமையும் புலிகளையே சாரும். தங்கள் லாபங்களுடன் கூடியதான தமிழ் பேசும் மக்களின் நலனில் அக்கறை காட்டியவர் ராஜீவ் என்பது உண்மை. இதில் எங்கள் நலன்களை சாதுரியமாக தட்டிக்கொள்ள தமிழ் பேசும் மக்களை புலிகள் விடவில்லை. ராஜீவ் இல்லாத ஆட்சிக்காலத்தில் இனவெறி அரசின் அட்டூழியங்களுக்கெதிராக இந்தியா குரல் கொடுக்காமையும் அதனால் உலகமே மௌனமாகிப் போனதும் நாம் கண்ட உண்மை. முற்றுமுழுதான தமிழ் பேசும் மக்களின் நன்மை விரும்பியாக ராஜீவ் விளங்கவில்லை ஆனால் ஏனையோருடன் ஒப்பிடும் போது ஆகக்குறைந்த அளவிலாவது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையில் கரிசனை காட்டியவர் ராஜீவ். அவரின் வரவையிட்டு இலங்கை அரசு கலங்கியதே இதற்குசான்று. அவரின் கரிசனைக்கு கைகொடுக்கக்கூடிய தந்திரோபாயங்களை அவரால் கையாளமுடியவில்லை.

**மூன்றாம் உலகநாடுகளுள் ஆசியாவில்** வல்லரசுத்தன்மையை நோக்கி இந்தியா வளர்ச்சி அடைவதை விரும்பாத மேற்குலக நாடுகளுக்கு, இந்தியாவின் வளர்ச்சியை தடை செய்ய, ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த, உள்ளூர் கலவரங்களை மூட்டிவிட, ஆயுதக் கலாச்சாரம் மேலோங்கி வளர புலிகளும் அவர்களின் தமிழ் நாட்டுக் கூட்டாளிகளும் வழி வகுத்துள்ளார்கள். இதன் பின் விளைவுகள் தமிழ் பேசும் மக்களை தேசத்தை தொலைத்தவர்களாக்கும்.

இலங்கையரசு புலிகளுடன் பேச்சுவார்த்தைநடாத்தும் என்ற செய்திகள் அடிபடுகின்றன. எதிர்பார்த்ததைவிட வேகமாகமுன்னேறிவரும் அரசபடைகளிடமிருந்து சமாதானம் பேச்சுவார்த்தை என்பவற்றிற்கு கடுமையான எதிர்ப்புதோன்றியுள்ளது. பிரேமதாசா வெளியில் ஜனநாயகக்காவலன் என்று அரசியல் நிர்ப்பந்தத்தின் பேரில் நாடகமாடினாலும் அதற்கு ஒத்தூதப் படைத்தலைவர்கள் தயாராக இல்லை. இதை மீறி பிரேமதாசா தனது நன்மைகருதி எதாவது செய்யநினைத்தால் அது ஒரு இராணுவஆட்சியை இலங்கையில் ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதுதவிர ஏற்கனவே அரசு-புலிகளின் தேனிலவில் புலிகள் ஏமாற்றிவிட்டது ஐக்கியதேசியக்கட்சிக்குள் முணுமுணுக்கப்படுகிறதாம். கடந்த பதினான்கு மாத இராணுவநடவடிக்கைகளில் யாருமே தட்டிக்கேட்காத போது, பேச்சுவார்த்தையென்பது சாக்குப்போக்காக இருக்கவேண்டுமே தவிர உளமார்ந்த நடவடிக்கையாக ஏன் இருக்கவேண்டுமென்பது பிரேமதாசா கூட்டத்துக்குள் கேள்வியாகியுள்ளதாம். இந்நிலை தமிழ்பேசும்மக்களுக்கு எப்படியான எதிர்காலத்தை கொண்டு வரும் என்பதை ஊகிக்கமுடிகிறது. இன்றையஅபாயகரமான இந்நிலையை உணர்ந்து தமிழ்பேசும்மக்களின் அரசியல் தலைமைகள் பொது எதிரிக்கெதிராக ஐக்கியப்படவேண்டியது அவசியமாகும்.



படிப்பகம்

# ஐரோப்பிய சஞ்சிகைகள் மீது கண்ணோட்டம்

இதைச் சஞ்சிகைகளின் கண்ணோட்டம் பற்றியது என்றும் சொல்லலாம். ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகள் தங்களின் வெளியீடுகள் மூலம் தத்தமது கருத்துக்களை மக்களின் சமூகத்திற்கு காவிச்செல்கின்றன. இதன் பொருள் மக்கள் சமூகம்ஆயும் உள்ளனர். சமூகம் இல்லாதும் உள்ளனர். உ-ம் -இக்கருத்துக்களை எழுதும் எழுத்தாளர்களும், இவற்றை வெளியிடும் சஞ்சிகைகளும் அவற்றை வாசிக்கும் வாசகர்களும்சமூகமாகும் இச்சந்திப்பையும் சமூகம் தாராமலே இவைகளை எழுதி வெளியிட்டு வாசித்துக் கொண்டிருப்பவர்களையும் குறிக்கலாம். இருந்தும் இச்சஞ்சிகைகளின் நோக்கு அல்லது ஓட்டம் சமூகம் பற்றியது. அப்படியானால் ஏன் இவர்கள் சமூகம் ஆகவில்லை. இது எல்லோரையும் வண்டு துளைப்பது போல் துளைக்கவில்லையா?

'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்ற ஒரு கூற்று உண்டு. அப்படியானால் இந்த எழுத்துக்களையும் கருத்துக்களையும் எழுதும் படிக்கும், வெளியிடும்மனிதர்கள் எல்லோரும் ஏன் சமூகமாகவில்லை. (1) இந்த மனிதர்களுக்கு எல்லாம் தெரியும்என்ற கண்மூடித்தனமான கர்வமா? அல்லது தங்களுக்கு தெரிந்தவைகளுக்கு மேல் தெரிந்துகொள்ளவிருப்பமில்லையா? (2) இந்த சஞ்சிகைகளின் எழுத்தும், கருத்தும் அவர்கள் ஒன்றுபடுவதைத் தடுக்கின்றவகையில் கோடுகள் கீறுகின்றனவா?

முதலாவது காரணி உண்மையானால் அவன் இன்றும் பிரச்சனைகளிலிருந்து ஒதுங்கி வாழ விரும்புகின்றான். அவனைப்பிரச்சனைகள் அணுகும்போதுஅவன் அவைகளைஎதிர்கொள்ளத் திராணியற்ற நிலை உருவாகும்போது நிச்சயம் அவன் சமூகமாவான். அதுவரை மனிதனாகத்தன்னை நினைத்தாலும் சமூகத்தின் அங்கம்என்பதை உணரமறுக்கின்றான்.

இரண்டாவதாக சஞ்சிகைகள் எப்படிக் காரணமாக முடியும்? இது சஞ்சிகைகளின் தோற்றம் எந்தத் **தேவைகளை** அடிப்படையாகக்கொண்டது என்பதில் தங்கியுள்ளது. இதை ஆராய்வது பல சஞ்சிகைகளுக்கும், நதிமூலமும் ரிஷிமூலமும் ஆராயப்படக்கூடாதவை என்பது போல் இதையும் விடுவோம்.

> **டியூஸ் பேக்கில் நடைபெற்ற பதினோராவது இலக்கிய சந்திப்பில் ஆ. வேலாயுதம் அவர்களால் வாசிக்கப்பட்டது.**

தமிழ் பேசும் மக்களின் சமகாலத்தேவைகள் சூழல், நாடு வசிப்பிடம் என்பவை களுக்கு ஏற்ப வேறுபட்டாலும் விடுதலைப்போராட்டத்தின் தேவையை முறையறைவதில் இச்சஞ்சிகைகள் ஒருமைப்பாடுள்ளனவாயிருக்கின்றன.

அப்படியானால் அவை வேறு எதில் வேறு படுகின்றன? போராட்ட நடை முறையிலும், போராட்டத்தை வழி நடத்துகின்ற சக்திகளிலும் போராட்டத்தின் பெறுபேறுகளை யார் அடையவேண்டும் என்பதிலுமே.

உண்மையிலேயே விடுதலைப் போராட்டம் மக்கள் விடுதலையைப் பிரதிபலிப்பதாக இருந்தால், அப்போராட்டத்தின் ஒட்டு மொத்தமான பெறுபேறுகளும் மக்களையே சாரவேண்டும். ஆனால் போராட்ட இலக்குகள் தவறி போராட்டம் நீண்டுகொண்டுபோகையில் இழப்புகளை மக்களும் அநுகூலங்களைப் போராட்ட சக்திகளும் பெற்றுக் கொள்கின்றார்கள். இந்த இலக்குத்தவறிய பொது எதிரிக்கெதிரான போராட்டத்தன்மைகளை பல சஞ்சிகைகள் புட்டுப் புட்டு வைத்தன. சில சஞ்சிகைகள் போராட்ட சக்திகளின் அரசியல் சாணக்கியம் என்றன.

சில மக்கள் உயிர் வாழ்வதற்கான உடனடித்தேவைகளின் அவசியங்களைஉணர்த்தினஇருந்தும் இவைகளுக்கிடையே தமிழ் பேசும் மக்களின் நன்மை கருதி ஒரு பொது நோக்கின் அடிப்படையிலான ஒற்றுமை ஏற்படவில்லை. பொது எதிரியை அம்பலப்படுத்துவதிலாவது குறைந்த பட்சம் ஒன்று பட்டிருக்கவேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை ஏன்?

ஒரே மொழியைப் பேசும் வேறு கலாச்சார, மத, தொழில் நடைமுறைகளைக்கொண்ட இனமாகக் காணப்பட்டமை. இது தொழில் வரைமுறையின் அடிப்படையில் வர்க்கமாக அமையாது சமூகப்பின்னணிகளின் அடிப்படையில் சாதியாக அமைந்துள்ள கூட்டாகாட்டுக் குணாம்சமாகும். இது இன்றும் விரிவடைந்து மாவட்டம்,

www.padippakam.com

பிரதேசம்,இனம் மதம் என்ற வேறுபாடுகளுடன் பரிணாமம் பெற்றிருப்பதாலும் இது வரைகாலமும் தோற்றம் பெற்ற போராட்டசக்திகளாயினும்சரி,நாளைதோற்றம் பெறப்போகும் சக்திகளாயினும் சரி இந்த சமூக அழுக்குகளின் தட்டுமாணத்திலிரு ந்துதான் உருவாகின, உருவாகும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதனாற்றான் எமது போராட்டச்சக்திகளுக்கிடையே விடாக்கண்டன் கொடாக்கண்டன் மனப் பாங்கு நிறைந்த ஐக்கியமற்ற போராட்டமாகக் காட்சிதருகின்றது.

இந்த ஒற்றுமையுணர்வு வளர்க்கப்படாமைக்கான பங்கில் எழுத்தாளர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும்,கல்விமான்களுக்கும்,அரசியல் வாதிகளுக்கும்,ஏன் மக்களுக்குமே பெரும் பொறுப்பு உள்ளது.இவர்கள் எல்லோரும் தங்களின் தனிப்பெருமைகளையும் பெயர்புகழ்களையும் வளர்க்கப் பாடுபட்டார்களேயன்றி புரிந்துணர்வின் அடிப் படையில் மனிதர்களுக்குள் ஏற்பட வேண்டிய சமூகஉணர்வை வளர்க்கமுன்வரவில்லை. எங்கள் சமூகத்தில் வளர்ச்சிபெற்ற உள்முரண்பாடுகளே சமூக ஒற்றுமைக்கு தடை யாக இருப்பதால் இம் முரண்பாடுகள் களையப்படவேண்டி போராட வேண்டிய தேவை எமக்கு முன் இமயம் போல் வளர்ந்திருக்கிறது. இதுவரை எவரும் இதற்கான போராட்டத்தை இதய சுத்தியுடன் தங்களையே அர்ப்பணித்து போராட முன்வராமை யினாலும், இப்போராட்டத்தின் அவசியத்தை உதாசீனம் செய்தமையாலும், எமது தேசிய விடுதலைப்போராட்டம் ஐக்கிய உணர்வற்ற சமூக அடித்தளங்களிலேயே நிற்கின்றது.இதற்காக இதயசுத்தியுடன் போராட முன்வந்தவர்களுக்கு மக்கள் எவ் வளவுக்கு தங்கள் ஆதரவை நல்கினார்கள் என்பது கேள்வியாகவேஉள்ளது. அவ்வாறு மக்கள் ஆதரவை நல்குவதை கடந்தகால நடைமுறைஅநுபவங்கள் தடுத்தனவா?அல்லது ஆயுதக் கொலைக் கலாச்சாரங்கள் தடுத்தனவா என்பதும் விடைகாண முடியாத வினாக்களாகவே உள்ளது.

கண்டம் விட்டுக்கண்டம் வந்தாலும் எம்மைப்பிடித்த கண்டம் விடவில்லை. நாங்கள் அதை நீக்க காண்டம் வாசிப்பதுபோல் நீண்ட எழுத்துப்போரிலேயே காலத்தைக் கழிப்பதையே காணக்கிடக்கின்றது.இங்கே வெளிவரும் சஞ்சிகைகளின் எழுத்துக் களிலும் கருத்துக்களிலும் இறந்தகாலத்தின் ஆட்சி நிகழ்காலத்திலும் நிகழ்காலத் தின் ஆட்சி இறந்தகாலத்தின்மீதும் செலுத்தப்படுவது போன்ற கருத்துக் காவுதல் கள் இடம் பெறுகின்றன.போராட்டசக்திகள்மீது பதிந்திருந்த சமூகக் குறைகள் புத்திஜீவிகள்,கல்விமான்கள்,எழுத்தாளர்களிலும் காணக்கிடக்கின்றன.அடி ஆமணக் கென்றால் நுனி நொச்சியா என்பது போல். இங்குள்ளவர்கள் நடைமுறைப் பிரச்சி னைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் தப்பித்துக்கொண்டால் போதும் என்று ஓடி வந்துவிட்டவர்கள்.இதில் சாதாரண குடியானவனிலிருந்து கல்விமான், புத்திஜீவி சமூகத்தொண்டன் எனப்பலரும் அடங்குவர்.அதனாற்றான் அந்த நடை முறைப் பிரச் சினைகளுக்கு,அப்பிரச்சனைகளின் தவறுகளிலிருந்து படிப்பினைகளைப் பெறுவதற் குப்பதிலாக அந்த நடைமுறைகளைப் பரிகசிக்கின்ற தாக்கங்களை இவர்களின் எழுத்து ஆக்கங்களில் காண முடிகிறது.இவைகளின் அடிப்படையில் இச்சஞ்சிகைகளை மூன்று வகைப்படுத்தலாம்.

(1) மரபுவழி அரசியல்வாதிகளின் போராட்டத்தன்மையை பேணும் பான்மை.

(2) மக்களின் உடனடித்தேவையான, உயிர்வாழ்வதற்கான சூழலைத் தோற்றுவித்து அதிலிருந்து போராடுவது.

(3) இவைகள் இரண்டையும் நிராகரித்து புதிய போராட்ட வடிவமைப்பை இங்கி ருந்தே தயாரித்தல்.

## மரபுவழி

'வாழையடி வாழையென வந்த தமிழ்க்கூட்டம்' என்பது போன்று மரபுவழி அரசியல்வாதிகள் வகுத்த பாத்திரத்தின் எச்சசொச்சங்களை அப்படியே பேணிப் பாதுகாப்பதன் மூலம் தம்மைத்வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் மட்டுமே அக்கறை உள்ளவர்களுக்கு வக்காலாத்து வாங்குவது இது தொண்டைக் குழாய்களினூ டாக நடத்தப்பட்டுவந்த சமாச்சாரம். இன்று குரல்வளைநெரிக்கப்பட்டு தூப்பாக் கிக்குழாய்களினூடாக வளர்க்கப்படுகிறது. வீரம், மறவர், ஆண்டபரம்பரைகளை,

www.padippakam.com

கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம், மொழி என துவேச உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் விதைப்பதன் மூலம் சேணம் கட்டிய குதிரையைப் போன்று வேறு திசைகளில் பார்வையைச் செல்லவிடாது வாசகர்களை ஒரேஇடத்தில் மையப்படுத்துதல் உ-ம் கலைவிளக்கு, ஏலையா, மண் போன்றவைகளைச் சொல்லலாம். இச்சஞ்சிகைகளில் எழுதும் வாசகர்களும் தங்களின் ஆக்கங்களை அந்த வகையாகவே எழுதுகின்றார்கள். ஆனால் வேறு சஞ்சிகைகளுக்கு எழுதும்போது அவர்களின் கருத்தும் பார்வையும் சஞ்சிகைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. இப்படியான எழுத்துக்கள் மூலம் எழுத்தாளர்கள் தங்களின் தளர்நிலையைக் காண்பிக்கின்றார்கள். கொள்கை இருந்தால் அதை நிலைநாட்ட துணிவும் உறுதியும் வேண்டும். உறுதியற்றவர்களிடம் கொள்கை இருந்தென்ன இல்லாமலென்ன. இரண்டும் ஒன்றுதான்.

(2) மக்களின் உடனடித்தேவையான, உயிர்வாழ்வதற்கான சூழலைத் தோற்றுவித்து அதிலிருந்து போராடுவது.

முதலாவது கட்ட மரபுவழி அரசியல்வாதிகளின் போராட்டநடைமுறைகள் நிராகரிக்கப்பட்டு ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாத விதியா எமது அரசியலில் ஏற்பட்டுவிட்டது. இக்கட்டத்தில் இப் போராட்டத் தலைமைகளை ஏற்றுக்கொண்ட போராட்டச்சக்திகளுக்கிடையில் ஐக்கியம்பேணப் படவேண்டும் என்பதையும் அதன் அவசியத்தையும் பல சக்திகள் உணரமறுத்துவிட்டன இந்த ஒற்றுமை பேணப்படாமையினால் பொது எதிரிக்கு எதிரான போராட்டம் இலக்குத்தவறி பாஸிசம் தலைதூக்கியதினால் போராட்ட சக்திகள் பலி எடுக்கப் பட்டன. இந்த துர் அதிஷ்டநிலைக்கு குடாநாட்டுக்குணாம்சம் நிறைந்த சமூகச் சிந்தனைகளே யிண்டுகொடுத்தன. இதனால் விடுதலைபற்றிய சிந்தனை விரிவு படாமல் குறுகிய வரம்புக்குள் தான்தோன்றித்தனமான மதிப்பீடுகள் செய்யப்பட்டுவிட்டன.

ஐக்கியம் முக்கியம் என்பது வலியுறுத்தப்படுவதற்கான அரசியல் சூழல்கள் தோற்றுவிக்கப்பட்டவேளையில் அதற்கான ஒத்துழைப்புக்களைக் கொடுக்க வேண்டுமென்ற அவசிய முன் மொழிவுகளுக்கு ஆயுதச்சூழல் மக்களுக்கு இடங்கொடுக்க வில்லை.

போராட்ட சக்திகளினால் சின்னாபின்னமாக்கப்பட்டு கந்தககாற்றைச் சுவாசித்துச் சலிப்படைந்து சகஜவாழ்க்கை திரும்பாதா என்று ஏக்கப்பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு ஒரு சனநாயகச் சூழல் தேவை. இச்சூழலின் ஊடாகவே மக்களின் கருத்துக்களின் அடிப்படையிலான போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டினை பிரதிபலிக்கக்கூடிய முறையிலும் முற்று முழுதாக போராட்டசக்திகளை நிராகரிக்கும் உரிமை மக்களையே சாரும் என்ற வகையில் எழுதிய எழுத்தும் சஞ்சிகைகளாக சிந்தனை, வெகுஜனம், அக்கினி, தேனி, ஓசை, பனிமலர், கதிர் போன்ற சஞ்சிகைகளைக்கொள்ளலாம்.

(3) முற்று முழுதாகவே போராட்டசக்திகளை நிராகரித்தல்.

மூன்றாவது வகையானது ஒட்டுமொத்தமாகவே எல்லாவற்றையுமே நிராகரிப்பது. இது நடை முறை உண்மைகளுக்கப்பால் கற்பனாவாதநிலையில் நின்று பேசப்படுவது. இவர்கள் கூறுவது போன்று புதிய தலைமையின் தேவை எப்போதூயார் இன்றைய தலைமைகளைநிராகரிப்பதூ இன்றைய தலைமை நிராகரிக்கப்படாமல் எப்படி ஒரு புதிய தலைமை தோற்றம் பெறும்? அப்படித் தோற்றம் பெறுவதானாலும் யாரின் மத்தியிலிருந்து தோற்றம் பெறுவதூ நடைமுறைகளுக்கும் உண்மைகளுக்கும் புறம்பான ஒரு புறச்சூழலிலிருந்து தோற்றம் பெறும் புதிய சக்தியால் எப்படி இன்றைய பாஸிசச் சூழலையும் போராட்டத்தலைமைகளையும் வெற்றிகொள்ளமுடியும்.

'கம்பத்தில் நின்று ஆடினாலும் காசு வாங்க கீழேதான் வரவேண்டும்' என்பார்கள். அதுபோல மக்களின் நடைமுறைகளினூடுதானே புதியவர்களும் போராடவேண்டும். சதி முயற்சி மூலம் ஒரு சனநாயகச் சூழலை உருவாக்கமுடியுமா? விமர்சனங்களின் மூலம் நிராகரிப்பது விரும்பத்தக்கது அதே நேரம் நிராகரிக்கப்பட்ட வெற்றிடத்தை நடைமுறை உண்மைகளினூடு எப்படி முன்னெடுப்பது. தீர்வை முன்வைக்காது எல்லோரையும் நிராகரிப்பதோ **அல்லது** பாஸிஸ சக்திகளை தேசிய சக்திகளாக

...பிக்கமுயல்வதும், கொள்கைகள் அற்றவர்ட்மத்தன்மையும், ... சிந்தனைகளுமாகும்.

மேலும் இச்சஞ்சிகைகளின் ஓட்டத்தில் ஐக்கிய இலங்கை, தேசியவிடுதலை, சமூ
மாற்றம், இனஐக்கியம், சுயநிர்ணயம், பெண்நிலைவாதம் எல்லாமே பேசப்படுகி
றன. ஆனால் பாஸிஸம் அழிக்கப்படாதசூழலில் இவைகளுக்கான தீர்வுகளை எந்தநடை
முறை ஊடகத்தின் வழியாக பெறப்போகின்றார்கள்? அப்படியான ஒரு அமைப்பு வடி
வம் இருக்கின்றதா? என்பவைகளை கூறுவதேயில்லை. பாஸிஸத்தை ஆயுதங்களால் முறி
யடித்துக்கொள்ளப்போகின்றார்களா? அல்லது உறவாடிக்கெடுக்கப் போகின்றார்களா
ஆயுதங்களால் எதிர் கொள்வதாயின் அந்த நடைமுறைகளை மேற்கொள்பவர்களை
இவர்கள் ஆதரிப்பார்களா? அல்லது அதைச்செய்பவர்கள் யார்? இல்லை உறவாடித்
தான் வெற்றிகொள்வதாயின் அவர்களைஆதரித்தவர்களுக்கும்அவர்களுடன் இணைந்
தவர்களுக்கும் கிடைத்த நடைமுறை அனுபவங்கள் மறக்கப்படக்கூடியனவா? அல்லது
அவர்கள்தான் இவர்களை ஏற்க உடன்பாடா? ஒற்றுமை வேண்டும் என்பவர்கள் யாரு
டன் யார் சேர வேண்டும் என்கிறார்கள்? இவைகளில் ஏன் இவர்கள் தெளிவான
பாதையைக்காணவும், காண்பிக்கவும் மறுக்கிறார்கள். காரணம் எழுத்தும், செயலும்
இருவேறு வடிவங்கள். சித்தாந்தமும், நடைமுறையும் அப்படியேதான். எதை வேண்டு
மானாலும் எழுதலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்த ஒரு அமைப்பும், ஒருங்கிணை
வும், விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வும், தியாகசிந்தையும் வேண்டும். எழுதுவதற்கு
சுகமான, நடைமுறைக்குக் கடினமான இவைகள்இரண்டையும் இணைத்து முடிச்சுப் போ
டும் போலித்தனமும், இரட்டைவேடமும் காகிதப்போராளிகளிடமும், திண்ணைப்
பேச்சுவீரர்களிடமுமே இருக்கும். இவைகள் வரலாற்றுப்பாடங்கள்.

ஐரோப்பாவிலே எழுதக்கூடிய, பேசக்கூடிய ஜனநாயகச் சூழல் இருக்கின்றது. உண்மை
களையும், சமூகத்தின் அவசிய தேவைகளையும், பாசிசத்துக்கஞ்சி எழுதத்திராணி
இல்லாது இருப்பதுடன், இவர்களுடைய எழுத்தில் பாஸிஸசக்திகளைத் தேசியத்தலை
மைகள் என்று தட்டித், தடவிக் கொடுக்கும் பாணி அதிமாகத்தென்படுகிறது. உயி
ர்தூண்டில், மனிதம், அ. ஆ. இ, புதுமை, சுவடு போன்றவற்றைக்குறிக்கலாம்.

அங்கே பாஸிஸசக்திகளின் கெடுபிடிகளின் மத்தியில், கரிக்குடல் கைகளில்ஏந்திய
நிலையில், அணிசேரமுடியாது தவிக்கும் மக்களை, உணர்வுகளை உறங்கவைத்து உணர்
ச்சிகளை அடக்கி, இன்றோ நாளையோ என உயிர் ஊஞ்சலாடவிட்டுக் கொண்டிரு
க்கும் மக்களை, இங்கிருந்து எழுதி புதிய போராட்டமுறையைத் தோற்றுவிக்க முயலு
தல், தாகம் நிறைந்தவனுக்கு மூலகங்கள், கருவிகள், ஆய்வுகூடங்கள் எதுவுமின்றி
**$H_2O$ என்ற வெறும் விதியைக்கூறி தண்ணீர் காட்டுவது போலவிருக்கின்றது.**

ஒவ்வொரு சஞ்சிகைகளுக்கும் தமது கருத்துக்களை மக்கள் முன் வைப்பதற்கு உரிமை
உண்டு. இதற்கான கருத்துச் சுதந்திரம் இன்னும் இங்கு பறிக்கப்படாமல் இருக்கின்றது.
இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தி சஞ்சிகைகள் தமது கருத்துக்களை வெளிப்படை
யாக எழுதுவதை நான் வர வேற்கிறேன். தெளிவாக எழுதி மக்களை வழி நடத்த
வேண்டிய பாரிய பொறுப்பு சஞ்சிகைகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் உண்டு. குழப்
பமாக எழுதி சஞ்சிகைகளையே மக்கள் வாசிக்காது வெறுப்படையச் செய்வது
கிடைத்திருக்கும் எழுத்தும், கருத்துச்சுதந்திரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதாக
வே நான் கருதுகிறேன்.

ஆகவே இன்றைய எமது தேவை என்ன? இதற்கு எங்களால் ஆற்றக்கூடியபங்களிப்பென்ன
என்ற கேள்விகளுக்கு எழுத்தாளர்கள், சஞ்சிகையாளர்கள், புத்திஜீவிகள், முற்போக்
காளர், இலக்கியவாதிகள், ஜனநாயக விரும்பிகள், தேசபக்தர்கள் என்போர் தங்களு
க்குள் இருக்கும் தனித்துவங்களையும், பிங்கலாய்ப்புகளையும், ஏக்கங்களையும் ஒருபக்
கத்தில் தூக்கி வைத்துவிட்டு மனம் விட்டுப்பேசுங்கள். இந்த இலக்கியச் சந்திப்பை
யே ஒரு நல்ல கருத்து மேடையாக, விவாத அரங்காக்குங்கள். முதலில் உங்களுக்குள்
ஒன்று படுங்கள். அதில் உங்களால் வெற்றிபெற முடிந்தால் அதையே விடுதலைப்
போராட்டத்திற்கான படிக்கல்லாகவும் ஆக்கலாம்.

# ஐரிஷ்விடுதலைப்போராட்டமும் அதன்வரலாறும்

கட்டுரை

வி.போல்( அயர்லாந்து)




==== ஒரேநாடு ஒரேமொழி ஒரேஇனம்ஏன் ஒரேமதம்என்றபோக்கிலிருந்துகூறுபட்டுநிற்கும் ====
============== அயர்லாந்தின் பரிதாபக் கதை சிறியதல்ல ==========

உலகப் படத்தில் **பிரித்தானியாவிற்கு அருகேயுள்ள** அழகிய பூமி, உழைக்கும்உழவர்பூமி, உல்லாசப்பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பூமி, பணக்காரர் மத்தியில் ஓர் ஏழைப்பூமி, அன்பான மக்களை அரணாகக் கொண்டபூமி அதுவே அயர்லாந்து குடியரசு.

தென் அயர்லாந்து எனப் பலரால் அறியப்பட்டஇந்நாடு ஒரு சுதந்திரநாடுஎன்று (அநேகருக்கு) கீழைத்தேசத்தவருக்கு தெரியாது. ஒன்றாய் இருந்த இலங்கையளவு (ஆனால் முழு அயர்லாந்தும் இலங்கையை விட சிறிது பெரியது. 26,000 சதுர மைல்) உடைய நாடு, ஒரே மொழி, ஒரே இனம் ஏன் ஒரேமதம் என்றபோக்கிலிருந்தும் கூறுபட்டு நிற்கும் பரிதாபக்கதை சிறியதல்ல. அது கண்ட போராட்டமும் சிறுமையானதல்ல. இன்று தென் அயர்லாந்து, அயர்லாந்து(குடியரசாகத்) தனிநாடாக இருந்தபோதும் இன்னும் வட அயர்லாந்து பிரித்தானிய ஆட்சியின்கீழ்த்தான் இருக்கிறது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிடியில் இலங்கை 16ம் நூற்றாண்டுதான் அகப்பட்டுக்கொண்டது. ஆனால் பக்கத்திலிருந்ததால் பரிதாபம் 12ம் நூற்றாண்டிலேயே ஏகாதிபத்தியப் பசிக்கு இந்தநாடு ஆளாகிப்போனது. இங்கிலாந்து என்ற நாட்டின் அரசாட்சி இம்பிரியலிசத்தன்மை கொண்டு நாடு பிடித்தல், அடிமைப்படுத்தல், **செல்வங்**களை தன்நாடு கொண்டுசெல்லல், தனதாட்சியை, மதத்தை, மொழியை அந்நாட்டில் வலுப்படுத்தல், பரப்புதல் போன்ற கொள்கைகளுடன், 10ம், 11ம், நூற்றாண்டுகளில் ஸ்கொட்லாந்து என்ற இங்கிலாந்துடன் நிலத்தொடர்பு கொண்ட அயல் நாடுகளில் விஸ்தரிக்கப்பட்டது. ஆனால் ஐரிஷ் கடல் இங்கிலாந்தையும் அயர்லாந்தையும் பிரித்திருந்தமையால் கடைசியாக அயர்லாந்தும் 11[illegible]ம் ஆண்டு பிரித்தானியப் படைகளால் பிடிக்கப்பட்டு 2ம்ஹென்றி அயர்லாந்தின் பிரபு(LORD OF IRELAND) ஆக ஆக்கிக்கொண்டான் ஆனால் இக்கால கட்டத்திலிருந்து சுமார் 300 ஆண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்து அயர்லாந்தின் முழுப் பொருளாதாரத்தின் மீதும், செல்வங்களின் மீதும் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆக டப்ளின்(DABLIN)ஐத் தமது வணிக நோக்கங்களுக்காகப் பாவித்தும், கப்பமாகவணிகர், விவசாயிகளிடமிருந்து பணம்பொருள் வசூலித்தலுமே முக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால் 1[illegible] ஆண்டிலிருந்து 7ம் ஹென்றி மன்னன் காலத்திலிருந்து இங்கிலாந்து அயர்லாந்தின் மேல் முழுக்கவனத்தையும் செலுத்த ஆரம்பித்தது.

நாம் இங்கிலாந்தின், அயர்லாந்தின் மீதான அதிகாரம் அடக்கு முறையை பற்றிய ஒவ்வொரு சம்பவத்தையும் விரிவாகப் பார்க்கப்போனால் அது பெரும்

சரித்திரமாக எழுதப்பட வேண்டும். நன்வே சுருக்கமாக 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் மட்டும் அதன் வரலாற்றைப் பார்ப்போம். ஏனெனில் இது அயர்லாந்தின் விடுதலைப் போராட்டத்தின் தியாகங்களையும், அடிப்படைகளையும் எமக்குத் தெரிவிக்கலாம். 1534ம் ஆண்டும் ஹென்றி "இங்கிலாந்து தேவாலயங்கள்" (CHURCH OF ENGLAND) ரோமப் பாப்பாண்டவரிடமிருந்து (POPE) சுதந்திரப்படுத்தப்பட்டவையாக ஆக்கப்படுகிறது என அறிவித்தான். இது மாட்டின் லூதரின் ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து வெளியேற்றத்தின் பிரதிபலிப்பே. இதிலிருந்து இங்கிலாந்தின், அயர்லாந்தின் மேலான அடக்குமுறை மேலும் வலுவடையத்தொடங்கியது. காரணம் அயர்லாந்தும் ஒருகத்தோலிக்க நாடாக இருந்ததே. ஒவ்வொரு காலமும் அயர்லாந்து எத்தனையோ உள்நாட்டுப்போர்களைக் கண்டிருக்கிறது. ஆனால் எல்லாப் போராட்டங்களும் மிகக்கொடூரமான முறையில் இங்கிலாந்தினால் அடக்கப்பட்டிருக்கிறது.

DUBLINஇன் மேலிருந்த அதிகாரம் டப்ளினைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் ஆரம்பமாகியது. இது 16ம் நூற்றாண்டில் இங்கிலாந்துப்படைகள் விவசாயிகளின் குடிசைகளை எரித்தும், அவர்களது விளைச்சல் பொருட்களைத் தங்கள் வசமாக்கியதும், சகல சொத்துக்களைச் சூறையாடியதும், ஒவ்வொரு இங்கிலாந்துப் போர்வீரனும் கோழி, பன்றி எனத்தன் கையில் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டதுமாக ஆரம்பமாகியது.

இங்கிலாந்தின் குடியேற்றம் 16ம்ஆண்டில் ஆரம்பமாகியது. இதில் அயர்லாந்தின் ULSTER (அல்ஸ்ரர்-வடக்கு என்பது அர்த்தம்) என்ற வட அயர்லாந்துப்பகுதியில் ஆரம்பிக்கப்படுகிறது. இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, புரட்டஸ்தாந்து மதத்தினர் இப்பகுதிகளில் குடியேற்றப் பட்டார்கள். ஆனால் ஒரு உண்மை என்னவென்றில் இங்கிலாந்தின் அடக்குமுறைக்கும், கொடூரங்களுக்கும் ஆளாகியும், ஐரிஷ்காரர் புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாறியவர்கள் மிகக் குறைவு ஆனால் அதேவேளை தங்கள் முற்று முழுதான மொழி மாற்றத்துக்குள்ளாகிவிட்டனர். தொடர்ந்த குடியேற்றத்தில் கத்தோலிக்கர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உதிரி நிலங்களாகக் கிடைத்தவைகளையும், குடியேற்றப்பட்ட இங்கிலாந்து புரட்டஸ்தாந்து மதத்தினருக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டது. இதனால் வாஞ்சையும், ஆத்திரமும் கொண்ட அயர்லாந்து மக்கள் (பெரும்பாலும் அல்ஸ்ரர் பிரதேசத்தவர்) 1641ம்ஆண்டு புரட்டஸ்தாந்து குடியேற்ற மக்களுக்கெதிராககொதித்தெழுந்தனர். இந்த எழுச்சியை வரலாறு "அக்ரோபர் அல்ஸ்ரர் எழுச்சி" எனச் சொல்லுகிறது. எனினும் இவ் வெழுச்சி இங்கிலாந்துப்படைகளால்கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டது.1

> **ஒரு ஐரிஷ்காரன் நிலம் வைத்திருக்க வேண்டுமானால் அவன் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவி இங்கிலாந்துக்கு விசுவாசமாக நடப்பேன் எனச் சத்தயப்பிரமாணம் செய்யவேண்டும்**

அயர்லாந்தின் மேற்குப்பகுதியில் இருப்பவர்களைத் தவிர ஏனைய பகுதிகளில் ஐரிஷ் கத்தோலிக்கர் சொந்தமாக நிலம் வைத்திருக்க முடியாத சட்டம் கொண்டு வரப்பட்டது. ஒரு ஐரிஷ்காரன் நிலம் வைத்திருக்கவேண்டுமானால் அவன் புரட்டஸ்தாந்து மதத்தை தழுவி இங்கிலாந்திற்கு விசுவாசமாக நடப்பேன் என சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். அயர்லாந்தின் ஆட்சிப்பொறுப்பும் இக்காலங்களில் அயர்லாந்திற்கு அனுப்பப்பட்டு குடியேறிய புரட்டஸ்தாந்து மக்களிடமே இருந்தது. இக்காலத்தில் அயர்லாந்தின் 4/5 பகுதி நிலங்கள் 1/3க்கும் குறைவான மக்களைக் கொண்ட புரட்டஸ்தாந்து மக்களிடமே இருந்தது. இங்கிலாந்து அரசாங்கமும்இவர்களுக்குச்சகல உதவிகளையும், வசதிகளையும் செய்து வந்தது.

அயர்லாந்து பாராளுமன்றத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஐரிஷ்காரர்

www.padippakam.com

வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து சமூக, பொருளாதார அரசியல் அடக்குமுறைகளினால் அயர்லாந்து மக்களின் நிலைமை மிக மோசமடைந்தது. இதுவரை காலமும் நிலம் வைத்திருந்த ஐரிஷ் கத்தோலிக்கர் அதனைத் தனது மூத்த மகனுக்கு வழங்க வேண்டுமாயின் அம்மகன் புரட்டஸ்தாந்தாக இருக்க வேண்டும். இல்லையேல் அந்நிலம் புரட்டஸ்தாந்து ஆட்சியாளர்களால் சுவிகரிக்கப்படும். இந்நிலங்கள் இங்கிலாந்திலிருக்கும் நிலச் சுவாந்தர்களுக்கு மலிவான விலையில் விற்கப்பட்டது. சொந்த மண்ணிலேயே கூலி வேலை செய்யும் பரிதாப நிலைக்கு பெரும்பகுதி மக்கள் உள்ளாக்கப்பட்டனர். இக் காலங்களில் மந்தை வளர்ப்பு, விவசாயம் போன்ற வற்றால் தமது பொருளாதாரத்தை நிர்ணயித்து வந்த ஐரிஷ் மக்கள் இவைகளின் இடைநிறுத்தங்களாலும், பாதிப்புக்களினாலும் மேலும் கஸ்டத்துக்குள்ளாகினார்கள். அயர்லாந்து இன்று ஐரோப்பாவில் ஒப்பீட்டு ரீதியில் பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்பதற்கு கடந்த காலங்களில் தொடர்ந்து இங்கிலாந்தின் பொருளாதார உறிஞ்சலே காரணம். ஒரு காலத்தில்தங்கள் சொந்த நாட்டிலேயே கூலிவேலைக்காரர்களாக மிகவும் பின்தங்கிய நிலையில் ஐரிஷ் மக்கள் வைக்கப்பட்டிருந்தனர். ஒரு ஐரிஷ்காரன் தனது சொந்த நாட்டில் மேற்படிப்பு படிக்க வேண்டுமாயின் அவன் புரட்டஸ்தாந்துக்காரனாக இருக்க வேண்டும்

பட்டுத் தத்தளித்த ஐரிஷ் மக்களின் முக்கிய **உணவு** தொடர்ந்து மூன்று பருவ விளைச்சலின்மையால் (உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை கிருமியினால் பாதிக்கப்பட்டமை) அயர்லாந்து வரலாற்றில் மறக்கப்படாத மோசமான பஞ்சம் 1845-49ம் ஆண்டில் இந்நாட்டை மிகமோசமாக பாதித்தது. இதனை உருளைக்கிழங்கு பஞ்சம் (POTATO FAMINE) என்றும் பெரும் பஞ்சம் (GREAT FAMINE) என்றும் இங்கு அழைக்கிறார்கள். இப் பஞ்ச காலத்தில் மக்களை நோய்களும் பாதித்தன. இப்பஞ்சத்தில் ஏற்பட்ட நிலைமையை அக்கால நிவாரணப்பணிகளில் ஈடுபட்டிருந்த சமாதான நீதவான் ஒருவர் வர்ணிக்கும் போது "நான்அந்தத்துர்ப்பாக்கியமான கிராமத்துக்குள் நுளைந்த போது அது கைவிடப்பட்ட கிராமம் போல்காட்சி அளித்தது. நான் சில குடிசைகளுக்குள் நுளைந்து பார்த்தபோது உடல் ஒட்டிய, நாவரண்ட, நாவேஇல்லாத இறந்தது போன்று காட்சியளித்த மக்களைக் கண்டேன். குழந்தைகள், பெண்கள், ஆண்களென அந்தக்காட்சியை என்னால் வர்ணிக்கமுடியாது. சில நிமிடங்களுக்குள் அந்த பஞ்ச மனிதர்களால் நான் சூழப்பட்டேன். இன்னும் அந்த பயங்கரநிகழ்வு, காட்சி என்னைவிட்டு நீங்கவில்லை. அதிகார பூர்வமாக, இறந்தவர்களின் எண்ணிக்கை இருபத்தையாயிரம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் வேறு பல கணக்கெடுப்புக்கள் உண்மையில் ஒரு மில்லியன் மக்கள் இறந்திருப்பார்கள்

"நான் அந்தத் துர்ப்பாக்கியமான கிராமத்துக்குள் நுழைந்த போது அது கைவிடப்பட்ட கிராமம்போல்காட்சியளித்தது

நான் சில குடிசைக்குள் நுழைந்துபார்த்தபோதுஉடல்ஒட்டிய நாவரண்ட.நாவேயில்லாத இறந்தது போன்றுகாட்சியளித்த மக்களைக் கண்டேன். குழந்தைகள்,பெண்கள்,ஆண்கள் என அந்தப் பரிதாபக் காட்சியை என்னால் வர்ணிக்கமுடியாது.

என்ற பரிதாபங்களும் இங்கு அந்நாட்களில் இருந்தது. தொடர்ந்த அவ்வப் போதான ஐரிஷ் மக்களின் போராட்டங்களையும், எழுச்சிகளையும் படைபலத்தினால் அவ்வப்போதே இங்கிலாந்து ஒடுக்கி அடக்கிவந்தது. பலஐரிஷ்காரர் அந்நாட்களில் பிரான்ஸ் சென்றே மேற்படிப்பை மேற்கொண்டனர். "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த" கதையாக சகல அடக்கு முறைகளுள்ளும் அகப்

எனச்சொல்கிறார். இந்தப் பஞ்சம் ஐரிஷ்மக்களை இந்நாட்டைவிட்டு வெளியேறத் தூண்டியது. 1846ல் ஒருலட்சத்துஆறாயிரம் மக்களும், 1847ல் இரண்டுலட்சத்து பதினையாயிரம் மக்களும், 1851ல் இரண்டுலட்சத்துஐம்பதினாயிரம் மக்களும் என இடம் பெயர்ந்தனர். இவற்றுள் 3/4 பகுதி மக்கள் அமெரிக்காசென்றனர். தொடர்ந்த பின்னைய காலங்களில் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா

www.padippakam.com

எனச் சென்றனர்.

இனி இங்கிலாந்துக்கெதிரான போராட்டங்களும், குரல்களும் வலுவடைந்ததை 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பார்ப்போம். 1800க்களிலிருந்து பிரித்தானியாவுக்கெதிராகத் தங்களாலான போராட்டங்களைச் செய்துவந்த ஐரிஷ் மக்கள் அதனைச் சில அமைப்புக்களின்




ஊடாக நடாத்தி வந்தபோதும் அவ்வமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் என அவ்வப்போது கைது செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டும் அவ்வமைப்புக்கள் இல்லாமல் ஒழிக்கப்பட்டு வந்தது. எனினும் ஒவ்வொரு காலங்களில் ஒவ்வொரு இயக்கங்களாக உருப் பெற்று

போராட்டங்கள் பெருமளவில் இல்லாது போனாலும் நடந்து கொண்டுதானிருந்தன. 1800, 1900ஆண்டுகளின் இடைப்பகுதியில் 'இளம் அயர்லாந்தினர்' 'ஐரிஷ் குடியரசுத் தோழமை' 'நிலைத்துவர்' (YOUNG IRELANDERS, I. R. B, FENIANS) போன்ற இயக்கங்கள் தோன்றி வடிவங்கள், முத்திரைகள் மாறிய போதும் 'நிலைத்தவர்கள்' (FENIANS) இயக்கம் மக்கள் மத்தியில் பிரித்தானியருக்கெதிரான ஐரிஷ் தேசிய வாதத்தினையும், அதேநேரத்தில் அவர்களது நடவடிக்கைகள், அரசியல் போக்குகள் பிரித்தானிய அரசாங்கத்தைச் சில தீர்வுகளுக்குத்தூண்டியது. அதன் மூலம் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் மாற்றங்களுக்கான காரணி


படிப்பகம்

ஙனை அது உருவாக்கியது. அக்காரணி களின் பயனாக 1870ம் ஆண்டில் பிரித் தானிய பிரதமராக பதவியேற்ற வில் லியம் எவார்ட் கிலட்ஸ்டோன்(WILLIAM EWARD GLADSTONE) அயர்லாந்தின் பிரச்சனை களை சிக்கலாக்காவண்ணம் இருப்பதற் கான மாறுதல்களை பல சட்டங்களின் மூலம் கொண்டுவந்தார். புரட்டஸ்தாந்து க் கோவில்களுக்குப்பணமாக சென்று கொண்டிருந்த கத்தோலிக்கரின் 1/10 பங்கு(TITHES) என்ற கப்பம் நிறுத்தப்பட் டது. நிலம் சம்பந்தமான சட்டங்களில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு பழைய புரட்டஸ்தாந்து மதத்தினரே நிலம் சொந்தமாகவைத்திருக்கமுடியும் என்றது மாறி கத்தோலிக்கரின் சில அபிலாஷைகளையும் அது தீர்த்து வைத்த போதும்(முற்றாகவல்ல) புரட்டஸ்தாந்து நிலப்பிரபுக்களை அது பாதிக்காததி னால் பிரச்சனைக்குரிய தளம் மாற்றப் படாமலிருந்தது.

க்லட்ஸ்ரோனின் மாற்றங்களின் எதி ரொலிப்பாக 'நிலைத்தவர்' இயக்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட போது அவர்களுக்காக வாதாடிய ISAACBUTT என்ற புரட்டஸ்தாந்து வழக்கறி ஞர் 'உள்நாட்டு சட்ட இயக்கம்' (HOME RULE MOVEMENT) என்ற அமைப்பினை உருவாக்கி னார். இது அயர்லாந்தின் மாறுதல்களை சில அடிப்படைகளில் ஏற்றுக்கொண்டா லும், அயர்லாந்து பிரித்தானியாவின் வெளிநாட்டுக்கொள்கைகளுக்கமையவே

ஙளைப் பேணும் வகையிலும், அயர்லாந்து சட்டதிட்டங்களை அயர்லாந்து மக்களே நிர்ணயிக்க வேண்டும் என்ற போர்க் குரல் கொடுத்தபோதிலும் பாராளும ன்றத்தைப் ஒரு கட்டத்தில் இவர் அவ மதித்தார் என்றதிற்காக பாராளுமன் றத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

இக்காலங்களில் க்லட்ஸ்டோனின் நில ச்சட்டம் ஆட்டம் காணத்தொடங்கியது. கன்சவேட்டிவ்(CONSERVATIVE PARTY) புரட்டஸ் தாந்தினருக்கு ஆதரவு வழங்கத்தொடங் கியதன் காரணமாக க்லட்ஸ்டோனின் (இவர் லிபரல் கட்சியை சேர்ந்தவர்) அயர்லாந்து சம்பந்தமான மும்மொழி கள் யாவும் பிரித்தானிய பாராளுமன் றத்தில் வாக்கெடுப்புக்களில் நிராக ரிக்கப்பட்டது.

பார்னலின் அரசியல் போராட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டுதானிருந் தது. அவரது அரசியல் வாழ்க்கை சரித் திரத்தில் இன்றும் ஐரிஷ் மக்களால் பேசப்படுகிறது. பார்னலின் இறப்புக்கு பின்னர் உள் நாட்டு சட்ட இயக்கம் பிள வுபட்டபோதிலும் பிரித்தானியபாரா ளுமன்றத்தில் லிபரல் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதாக அமைந்தது.

ஐரிஷ் மக்களுக்குள் அவ்வப்போது தோ ன்றிய அரசியல் தலைவர்களின் நடவடி க்கைகளினால் ஐரிஷ் மக்களுக்குள் தே சிய வாதம் வளர்ந்து கொண்டிருந்தது

---

**ஐரிஷ் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் 20ம் நூற் றாண்டின் ஆரம்பமே முக்கியத்துவம் வாய்ந்ததாக கணிக்க ப்படுகின்றது. ஏனெனில் இன்றைய அரசியல் கட்சிகளுக்கும் போராட்ட அமைப்புகளுக்கும் இக்காலமே விதையிட்டது.**

---

இருக்க வேண்டும் எனச்சொன்னது. இந்த 'உள்நாட்டு சட்ட இயக்கம்' ஐரிஷ் உள் நாட்டுச்சட்டம் என்ற ஐரிஷ் உறுப்பினர் களைக்கொண்ட கிளை (BRANCH) இயக்கத் தையும் உருவாக்கியது. இதன்தலைவராக ஐரிஷ் வழக்கறிஞர் சார்ள்ஸ் ஸ்ருவேர் ட் பார்னல்(CHARLES STEWART PARNELL) ஆக்கப் பட்டார். இவர் இங்கிலாந்துப் பாராளு மன்றத்தைப் ஒரு சாதுரியமான சாதனமா கப் பயன்படுத்தி அயர்லாந்தின் நலன்

அந்த வளர்ச்சியின் துரிதம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணக்கூடி யதாகவிருக்கின்றது. இக் காலத்தில் தான் ஐரிஷ் விடுதலைப்போராட்டத் தின் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த தாகக் கணிக்கப்படுகிறது. ஏனெனில் இன்றைய அரசியல் கட்சிகளுக்கும், போ ராட்ட(ஆயுத) அமைப்புக்களுக்கும் இக் காலமே விதையிட்டது. இன்றைய கட்சி களின் விதை ஏற்கனவே குறிப்பிட்ட

www.padippakam.com

ஐரிஷ் சகோதரத்துவக்கட்சி 'நிலைத்தவர்' என்ற கூட்டு அமைப்பிலிருந்து உருவாகியது. I.R.B, FENIAN கட்சிகளின் பரிணாமத்தினைப்பார்ப்போம். ஐரிஷ் கத்தோலிக்க மக்களின் வாழ்க்கை முன்னேற்றமடையாத நிலையிலும் தொடர்ந்தும் பிரித்தானிய ஆட்சியின் அடக்கு முறைகளும் பல வடிவங்களில் அயர்லாந்தில் பரந்திருந்தமையினால் மேலும் அரசியல் ஆயுதப்போராட்டம் தொடரவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் இருந்துகொண்டிருந்தது. இக்காலகட்டத்தில் அரசியல் கட்சிகளுக்கெல்லாம் தாய்க்கட்சியாக அமைந்த SINN FEIN (நாங்களாகவே-OUR SELVES) என்ற அரசியல் கட்சியின் தோற்றம் அக்காலகட்டத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஐக்கிய ஐரிஷ்காரன் (UNITED IRISHMAN) என்ற பத்திரிகையின் ஆசிரியரான ஆதர் கிரிவித் (ARTHUR GRIFFITH) என்பவரால் ஆரம்பிக்கப்படுகிறது. இக்கட்சி இன்றுஅதேபெயரில் I. R. A. (ஐரிஷ் குடியரசு இராணுவம்) இயக்கத்தின் அரசியல்கட்சியாகியங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால் **கொள்கை** வித்தியாசம் பலதரப்பட்ட வர்க்கவித்தியாசங்களின் நிமித்தம் உலகில் எங்கும் நடப்பது மாதிரி இந்தத்தாய்க்கட்சியிலிருந்து எத்தனையோ சிசுக்கட்சிகள் பிறந்து இன்று வளர்ச்சியடைந்துள்ளன. இன்று அயர்லாந்துக் குடியரசின் அரசாங்கத்தில் உள்ளகட்சியான FIANNA FAIL கட்சி SINN FEIN கட்சியிலிருந்து உருவாகியதே. ஒற்றுமையின்மை என்பது எங்கள் நாட்டில்மட்டுமல்ல ஏனையநாடுகளிலும் போன்று 1922ம் ஆண்டில் SINN FEIN கட்சிக்குள் ஏற்பட்ட கொள்கை முரண்பாடுகளினால் உள்நாட்டுயுத்தமே நடைபெற்றது. இதற்கு காரணம் தற்காலிகத்தீர்வான சுதந்திர ஐரிஷ்மாநிலம் (FREE IRISH STATE) சம்பந்தமான பிரித்தானிய தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதும் எதிர்ப்பதுமான இருபிரிவினையே.

சுமார் அறுநூறு பேர் இவ்யுத்தத்தில் கொல்லப்பட்டனர். சுமார் மூவாயிரம் பேர் படுகாயமடைந்தனர். இதில் ஆதர் கிரிவித் கொல்லப்பட்டார்.

இக்காலத்தில் அயர்லாந்து பிரித்தானியாவுக்கு கீழ் இருந்து வந்தபோதும் அயர்லாந்தின் நிர்வாகம் டப்ளினில் அமைந்திருந்த பாராளுமன்றத்தினால் நிர்வகிக்கப்பட்டது. இதேவேளை ஐரிஷ் கத்தோலிக்க சமுகத்தின் மத்தியில் அமைந்திருந்த கட்சியான SINN FEIN உடன் பிரித்தானிய அரசு சமரசம் செய்யும்போது SINN FEIN மக்கள் சார்பிலானசில விடயங்களை வற்புறுத்தத்தொடங்கியது ஆனால் முழு அயர்லாந்தினையும்சேர்ந்த தீர்மானம் எடுக்கமுடியாதபடி புரட்டஸ்தாந்துக்கட்சியான UNIONIST இன் ஊடாக புரட்டஸ்தாந்து மக்களைத் தூண்டிவிட்டு நாடு முழுவதற்குமான தீர்மானத்தை எடுக்க முடியாதபடி அயர்லாந்தின் பிரிவினைக்கு அடி கோலியது.

அப்பிரிவினையான ஆறு மாகாணங்களைக்கொண்ட வட அயர்லாந்தும் இரண்டு மாகாணங்களைக் கொண்டதாக சுதந்திரஅயர்லாந்தும் 1921ம்ஆண்டு அமைக்கப்பட்டது. ஒன்பது மாகாணங்கள் வடக்கு என்று சொல்லப்படுகின்ற ULSTER இற்குள் அடங்கியபோதும், புரட்டஸ்தாந்து மக்கள் 2/3 பங்கு என வாழ்கின்ற ஆறு மாகாணங்களையும் தனிமைப்படுத்தி அதைப்பிரித்தானியாவிற்குக்கீழ் வைக்கமுற்பட்டது பிரித்தானிய அரசு. இது புரட்டஸ்தாந்து மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக எனஅறிவிக்கப்பட்டது

இனித்தற்போதைய ஆயுதப் போராட்டத்திற்கான காரணங்களைப் பார்ப்போம். I. R. A. என்றால் இன்று உலகம் பூராகவும் தெரிகின்ற ஒரு இயக்கம். ஆனால் இதனை எத்ததைபேர் போராளிகள் என்றும் எத்தனை பேர் பயங்கர

I. R. A. என்றால் இன்று உலகம் பூராகவும் தெரிகின்ற ஒரு இயக்கம். ஆனால் இதனை எத்தனை பேர் போராளிகள் என்றும் எத்தனை பேர் பயங்கரவாதிகள் என்றும் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியே. ==========================

படிப்பகம்

www.padippakam.com

[illegible] றார்கள் என்பது கேள்விக்குறியே. இன்று I. R. A. என்று சொல்லப்படுகின்ற ஐரிஷ் குடியரசு இராணுவம் பரிணாமரீதியில் மந்த நிலையிலும், போராட்டரீதியில் ஆரோக்கியமின்மையான நிலைக்கும் பல சூழ்நிலைகளைக் காரணமாகச் சொல்லலாம். முதலில் I. R. A. ஆரம்பம் வளர்ச்சியை பார்ப்போம்.

இதன் ஆரம்பம் 1916ம் ஆண்டில் தொடங்கியது. I. R. B. என்று ஏற்கவே குறிப்பிடப்பட்ட இயக்கம், SINN FEIN கட்சி இவைகளின் தொடர் கூட்டான இளைஞர் அமைப்பாக இது ஆரம்பமாகியது. கத்தோலிக்க மக்களின் நலன்களை எந்த விதத்திலும்பாதுகாப்பது இவர்களதுகடமையாக விருந்தது. 1921ம் ஆண்டு வட அயர்லாந்து வேறாகவும், தென் அயர்லாந்து ஐரிஷ் சுதந்திர மாநிலமாகவும் இயங்கஆரம்பித்தபின்னர் 1922 ம் ஆண்டு கொள்கை வித்தியாசத்தினால் ஏற்பட்ட உள்நாட் டியுத்தத்தின் பின்னர் மிஞ்சிய தலைவர்களின் காலத்திற்கேற்பஅரசியல் மாற்றங்கள் தீர்வுகளை ஏற்றுக் கொள்ளுதல் இவைகளின் காரணமாக எல்லாக்கட்சிகளிலிருந்தும் I. R. A. தனித்து இயங்க (1926ம் ஆண்டிலிருந்து) ஆரம்பித்தது. SINN FEIN கட்சியிலிருந்து I. R. A. யுடன் முரண்பட்டவர்கள் FIANNA FAILகட்சியை ஆரம்பிக்கவும் I. R. A. முழு இராணுவ இயக்கமாகவும், SINN FEINஅதன் அரசியற் கட்சியாகவும் இயங்கத் தொடங்கின.

நிராகரிக்கப்பட்டது. இதற்கிடையில் ஐரிஷ் சுதந்திர மாநிலத்தை அயர்லாந்துக் குடியரசாக மாற்றுவதிலேயே ஏனைய கட்சிகள் குறிப்பாக FIANNA FAIL கட்சி முரண்பாடாகவிருந்தது. இதனால் தென் அயர்லாந்துக் குடியரசாக முற்று முழுவதுமாக பிரித்தானிய அரசிடமிருந்து 1937ம் ஆண்டு விடுதலை பெற்றுக் கொண்டது.

ஆனால் I. R. A. யின் முழு அயர்லாந்தும் குடியரசாக வேண்டுமென்ற கொள்கை, எதிர்பார்ப்பு ஈடேறவில்லை. வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தினரின் கட்சியானயெ.ஸஉம் ஏனையகட்சிகளும் அரசாங்கம் நடத்துகின்ற போது கத்தோலிக்கரின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. இன்னும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதன் நிமித்தம் I. R. A. வட அயர்லாந்திலுள்ள கத்தோலிக்கரின் நலன்களைப்பேணவும், வடஅயர்லாந்தை அயர்லாந்துக் குடியரசுடன் இணைந்த முழு அயர்லாந்துக்குடியரசை நிறுவுவதற்கான போராட்டத்தினை பிரித்தானிய அரசாங்கத்திற்கு எந்தவகையிலும் தலையிடியைக் கொடுத்தாவது வென்று தமது இலக்குகளை அடைய வேண்டும் எனக்கிளம்பியது. குண்டுவைப்பது என்பது I. R. A. யின் ஆயுதப்போரில் முதன்மையானதாகவிருந்தது, இருக்கின்றது. இராணுவ வாகனங்களுக்கு குண்டு வைப்பது அரச இயந்திரங்களைச் சேதப்படுத்தல் அரசு முக்கியஸ்தர்களைக் கொல்லுதல்

குண்டு வைப்பது என்பது I. R. A. யின் ஆயுதப்போரில் முதன்மையானதாகவிருந்தது, இருக்கின்றது. இராணுவ வாகனங்களுக்கு குண்டு வைப்பது அரச இயந்திரங்களைச் சேதப்படுத்துதல், அரசு முக்கியஸ்தர்களைக் கொல்லுதல் என்ற செயல் பாடுகளை I. R. A. தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. ========================

என்ற செயற்பாடுகளை I. R. A. தொடர்ந்து மேற்கொண்டு வந்தது.

இக்காலப்பகுதியில் I. R. A. தனது அரசியற் கட்சியான SINN FEIN ஊடாக எத்தனையோ சமரசங்களை மேற்கொண்டது இருப்பினும் பிரித்தானிய அரசு ஒன்று பட்ட அயர்லாந்துக்கு இணங்கவில்லை. SINN FEINஇன் பிரச்சாரமான 'ஒன்று பட்ட அயர்லாந்தில் எல்லா மக்களுக்குமான முழு உரிமையும் ஒன்று பட்ட ஐரிஷ் சமூகத்தின் முன்னேற்றமும்' என்ற கருத்து வட அயர்லாந்துபுரட்டஸ்தாந்தவர்களினால்

இதற்கிடையில் அயர்லாந்துக் குடியரசு தனது சுதந்திரத்தின் பின்னர் பொருளாதார ரீதியாக முன்னேற முடியாத, பிரித்தானியாவில் தங்கியிருத்தல், என்ற நிலையில் இரு அரசாங்கங்களும் பொருளாதாரச்சண்டைக்குள் புகுந்தன. ஆனால் இநதப்பொருளாதாரச் சண்டை

படிப்பகம்

www.padippakam.com

யில் அயர்லாந்து பிரித்தானியாவை வெல்ல முடியவில்லை. மாறாக அவர்களில் தங்கியிருக்க வேண்டியநிலையாகியது. ஆனாலும் 1949ம் ஆண்டு அயர்லாந்துக்குள்ளும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டதனால் பிரித்தானியாவின் தலைமையில் இயங்கிக்கொண்டிருந்த பொது நலவமைப்பு நாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டது. இது அயர்லாந்து பிரித்தானியா மீது எவ்வளவுக்கு வெறுப்பு அல்லது கோபம் வைத்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

இன்னொரு விடயம் என்னவென்றால் இக்கால கட்டங்களில் 1921இலிருந்து 60வரை அயர்லாந்துக்குடியரசிலிருந்து மட்டும் பத்துலட்சம் ஐரிஷ் மக்கள் நாட்டைவிட்டு வேற்று நாடுகளுக்குச் சீவிதம் செய்வதற்காகச் சென்றனர். இதன் காரணம் அயர்லாந்தின் பொருளாதார நெருக்கடியே. ஐரோப்பாவிலேயே ஏனையநாடுகளைவிட மூன்றுமடங்குஎன்றவிகிதத்தில் இங்கிருந்து மக்கள்வெளியேறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தற்போது பொருளாதாரநிலை ஓரளவுக்குபரவாயில்லை என்ற போதிலும் இன்னும் இங்கு படிப்பை முடித்துவிட்டு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியுசிலாந்து போன்ற நாடுகளுக்கு மக்கள் சென்று சீவிக்க எத்தனிக்கிறார்கள்.

ஆனால் தற்போது கடுமையான கட்டுப்பாடுகள் ஐரிஷ் மக்களுக்காக இந்நாடுகள் உள் வருகைச் சட்டங்களைப் போட்டுள்ளது. இன்னும் அமெரிக்காவில் மட்டும் பத்து லட்சம் ஐரிஷ்மக்கள் சட்டவிரோதமாக இருக்கிறார்கள்.

I. R. A. யின் நடவடிக்கைகள் இந்தநூற்றாண்டின் ஆரம்பத்திலே தொடங்கியபோது புரட்டஸ்தாந்து மக்களுக்குள்ளும் சில ஆயுதக் குழுக்கள் புரட்டஸ்தாந்து மக்களைக் காப்பாற்றவென்று ஆங்கில முக்கியஸ்தர்களின் உதவியுடன் தம்மை ஆயுதமயப்படுத்திக்கொண்டன. இவ்வமைப்பான ULSTER VOLANTEER FORCE (வடக்கு தொண்டர்படை) கத்தோலிக்க மக்களுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியது. இதில் வேடிக்கை என்னவென்றால் பல ஐரிஷ் காரரே, ஐரிஷ் காரருக்கெதிராகப் போரிட்டது. போரிடுவதே. இது உலகில் புதியதில்லைத்தான். பிரித்தானிய அரசும் பிரிவிலிய லிசத்தன்மையுடன் தனது மேலாட்சியை வட அயர்லாந்தில் நிலைநாட்டுவதற்காக புரட்டஸ்தாந்து மக்களை கத்தோலிக்க மக்களுடன் நட்புறவு கொள்ளாவண்ணம் பார்த்துக் கொண்டது.

**I. R. A. யின் நடவடிக்கைகள் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலே தொடங்கியபோது புரட்டஸ்தாந்து மக்களுக்குள்ளும் சில ஆயுதக்குழுக்கள் புரட்டஸ்தாந்து மக்களை காப்பாற்றவென்றுஆங்கில முக்கியஸ்தர்களின் உதவியுடன் தம்மை ஆயுத மயப்படுத்திக் கொண்டனர். இவ்வமைப்பான ULSTER VOLANTEER FORCE (வடக்கு தொண்டர்படை) கத்தோலிக்கமக்களுக்கெதிராகஈடுபட்டனர்**

இவ்வாறு I. R. A. யினதும், அதற்கெதிரான UVFஇனதும் நடவடிக்கைகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அயர்லாந்துக் குடியரசு மக்கள் வட அயர்லாந்தின் பிரச்சனையை அரசியற்கண்கொண்டு பார்க்கத்தவறிவிட்டனர் பலர் வட அயர்லாந்துப்பிரச்சனை தீரப்போவதில்லையென்றும் I. R. A. யின் ஆயுத நடவடிக்கை அயர்லாந்து அரசியற் பிரச்சனைக்குத் தீர்வை வழங்காததன்றி மேலும் சிக்கலுக்குள் கொண்டு போய்விடும் என நினைக்கிறார்கள்.

வட அயர்லாந்து அரசியற்பிரச்சனை முக்கிய தளமாக கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமுகங்களுக்கிடையிலும், பிரச்சனைகளின் ஆரம்ப காரணர்களான பிரித்தானிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலுமே தங்கியிருக்கின்றது. வெளியுலகுக்கு வட அயர்லாந்துப்பிரச்சனை வெறும் மதங்களுக்கிடையிலான பிரச்சனையாக பிழையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவின், பிரித்தாளும் தன்மையில் இப்பிரச்சனையும் ஒன்று. இன்றும் இரு சமுகங்களுக்கிடையிலான முன்னுரிமைப் பிரச்சனை வட அயர்லாந்தில் தலைவிரித்

படிப்பகம்

www.padippakam.com

நாட்டிலேது கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக இருந்தபோதும் பாராளுமன்ற (பிரித்தானிய) 'நொதன் கவுன்சில்' இடங்களுக்கான எண்ணிக்கையைத் தீர்மானிப்பதில் புரட்டஸ்தாந்து சமூகங்களுக்கான சாதகத் தன்மைகளையே கொண்டுள்ளது. இன்னும் சில தனியார், அரசாங்க நிறுவனங்களில் முன்னுரிமை புரட்டஸ்தாந்து மக்களுக்கே வழங்கப்படுகிறது. கத்தோலிக்கர்களுக்கு இரண்டாம் பட்சமே. இதன் பிரதிபலிப்பு அயர்லாந்துக்குடியரசிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சில இறுக்கமான கத்தோலிக்கப் பகுதிகளில் குடியரசில் உள்ள புரட்டஸ்தாந்து மக்கள் இரண்டாம்பட்சமாக பராமரிக்கப்படுவதுண்டு.

வட அயர்லாந்துப் போராட்டமானது தற்போது எந்நிலையில் உள்ளது, அது எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகளைப் பார்ப்போம்.

SINN FEIN கட்சியும் அதன் இராணுவ அமைப்பான I. R. A. (ஐரிஷ் குடியரசு இராணுவம்) யும் இந்தநூற்றாண்டிலிருந்து ஐரிஷ் விடுதலைப் போராட்டத்தில் பெரும் தாக்கங்களை விளைவித்துள்ளன. I. R. A. தடைசெய்யப்பட்ட பயங்கர வாத இயக்கமாக பிரித்தானிய அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட போதிலும் I. R. A. யின் அரசியல் கட்சியான SINN FEIN அமைப்பு சட்ட பூர்வமாகப் பதியப்பட்ட அமைப்பாக இருந்துகொண்டிருக்கிறது.

'வெஸ்ட் மினிஸ்ரர்' பாராளுமன்றத்தில் சில ஆசனங்களிலும் உள்ளது. வட அயர்லாந்திலும், இங்கிலாந்திலும், அயர்லாந்துக் குடியரசிலும் தமது இராணுவ நடவடிக்கைகளை I. R. A. மேற்கொண்டு வந்தது. 60ம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியிலும், 70ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் வட அயர்லாந்தில் பெரும் கலகங்கள், யுத்தங்கள் நடைபெற்றன. 69ம் ஆண்டில் வட அயர்லாந்தின் பல நகரங்களிலும் இருசமூகங்களுக்கிடையிலான கடுமையான கலகங்கள் மூண்டன. கலகங்கள் விட்டு விட்டு 72ம் ஆண்டு மட்டும் நடை பெற்றன. இச்சண்டையில் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். இக்கலகங்களை அடக்க முடியாத வட அயர்லாந்துஅரசாங்கம் அதன் பிரதம மந்திரிபதவி பிரித்தானிய அரசாங்கத்தால் கலைக்கப்பட்டு பிரித்தானிய அரசாங்கத்தின் நேரடிக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு 'வட கவுன்சில்' (NOTHERN COUNCIL) என்றமுறை உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய பதவி வடக்குச் செயலாளர் (NOTHERN SECRETARY) என அழைக்கப்பட்டது. இவருக்கு உள்நாட்டு நிர்வாகம் சம்பந்தப்பட்ட உரிமைகள் இருந்த போதும் கூடிய உரிமைகள் மத்திய பிரித்தானிய அரசாங்கத்தின் (பிரதம மந்திரியின்) கையிலேயே இருந்தது.

பிரச்சனையை அடக்குவதற்காக பிரித்தானிய அரசாங்கத்தால் 72 ம் ஆண்டு பிரித்தானியப்படைகள் வட அயர்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இது பிரச்சனையை மேலும் சிக்கலாக்குவதாகவே அமைந்தது. ஆங்கிலப்படை கத்தோலிக்கச் சமூகத்திற்கு மேலும் மேலும் பிரச்சனை கொடுக்கும் படையாகவே இருந்து கொண்டிருந்தது. இன்னும் இருக்கிறது. ஏனெனில் பிரித்தானியப் படையின் ஆக்கிரமிப்பு மேலும் கத்தோலிக்க சமூகத்தின் மத்தியில் ஆத்திரத்தையும் அமைதியின்மையையும் வளர்த்தது. பலர் கொல்லப்பட்டனர். (சந்தேகத்தின் பேரில்) இன்னும் பலர் இங்கிலாந்திலும், வட அயர்லாந்திலும் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களுக்காக இங்கிலாந்திலும் வட அயர்லாந்திலும் ஐரிஷ் மக்கள் (வட அயர்லாந்து அயர்லாந்துக் குடியரசு இருதரப்பிலும் இருந்து வந்த ஐரிஷ் மக்கள்) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இங்கிலாந்து நீதி மன்றத்தில் பிழையாகத் தீர்க்கப்பட்டு அப்பாவி

---

**60ம் ஆண்டுகளின் இறுதிப்பகுதிகளிலும் 70ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் வட அயர்லாந்தில் பெரும் கலகங்கள், யுத்தங்கள் நடைபெற்றன. 69ம் ஆண்டில் வட அயர்லாந்தின் பல நகரங்களிலும் இருசமூகங்களுக்கிடையிலான கலகங்கள்மூண்டன. கலகங்கள் விட்டு விட்டு 72ம் ஆண்டுமட்டும் நடைபெற்றன. இச்சண்டையில் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர்.** =====================

---

www.padippakam.com

மக்கள்குடாப்புகளுக்கும்மேலானஆண்டுகள் சிறையில் அடைக்கப்படுகின்ற பரிதாபம் இன்னும் நடக்கின்றது. அதற்கு உதாரணமாக 74ம் ஆண்டு இங்கிலாந்து பேர்மிங்காம் இடத்தில் நடந்த இங்கிலாந்துக்கெதிரான I. R. A.குண்டு வெடிப்பு சம்பவத்திற்காக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட நால்வரையும் பொலிசாரின் பிழையான வாக்கு மூலங்கள், வழக்குத்தயாரிப்புகள் காரணமாக குற்றவாளிகள் எனக்கண்டு ஒவ்வொருவருக்கும் சுமார் இருபத்திரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.ஆனால் மீண்டும் மீண்டும் எதிர்மனுக்களினால் நால்வரும்(ஒரு பெண்உட்பட)89ம் ஆண்டின் இறுதியில் சுமார் 15 வருடங்களின்பின்குற்றவாளிகள் இல்லையெனக்கண்டு விடுவிக்கப்பட்டார்கள். இது பிரித்தானியா நீதிக்கு ஒருஓட்டையாக அமைந்தது.மிக அண்மையில் 1973ம் ஆண்டு பேர்மிங்காம்(BURMINGHAM) என்னும் இடத்தில் மதுவருந்தகம்(PUB) ஒன்றில் I. R A. யின் குண்டுவெடிப்புக்குச் சுமார் 21 ஆங்கில மக்கள் கொல்லப்பட்டதையடுத்துச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அறுவர் 16ஆண்டுகாலச் சிறைத்தண்டனையின்பின் கடந்த மார்ச்மாதம் குற்றவாளிகள் இல்லையென உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுவிடுதலை செய்யப்பட்டனர். இது மீண்டும் பிரித்தானிய சட்டத்திற்கும் நீதிக்கும் கறையாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து பிரித்தானிய உள்நாட்டு அமைச்சர் டொம் கிங்(TOM KING)இனால் நீதிசம்பந்தமான விசாரணைக்கமிஷன்(ROYAL COMMISSION) ஒன்று தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியக்கண்டத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த I.R. A ஐரோப்பியகண்டத்தில் பிரித்தானிய நலன்களுக்கெதிரான தாக்குதல்களை 80 களில் செறிவுபடுத்திக்கொண்டது.

ஜேர்மன்,பெல்ஜியம்,நெதர்லாந்து என்று I. R. A. யின் குண்டு வைத்துத்தாக்குதல் சுட்டுக்கொல்லல் என்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்தன.நடக்கின்றன. ஆயுத உதவி முன்பெல்லாம் அமெரிக்காவிலுள்ள ஐரிஷ் விடுதலை விரும்பிகளிடமிருந்து கிடைக்கும் பண உதவிகளைக்கொண்டே ஆயுதச்சந்தைகளில் வாங்கப்பட்டது.ஆனால் 80ம் ஆண்டுகளின் நடுப்பகுதிகளில் லிபிய அரசாங்கத்திடமிருந்து தாராள ஆயுத உதவிகள் கிடைத்தன.இது லிபிய பிரித்தானிய முரண்பாட்டினால் கிடைத்த உதவியுமாகும். 87ம் ஆண்டு லிபியாவிலிருந்து ஒரு கப்பலுடன் வந்த பெரும் தொகையானஆயுதம் பிரான்ஸ் அரசாங்கத்தினால் பிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

இன்னும் பிரித்தானியப் படைகளுக்கெதிரான தாக்குதல்கள் (சோதனைத்தடைகள்,தாக்குதல்கள், தாளப்பறக்கும் ஹெலி ,விமானங்களுக்கெதிரான'ரொக்கட்' தாக்குதல் போன்றவை)தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதே வேளை பிரித்தானியப் படைகளுடன் தொடர்புடையவர்கள்,படைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் உறவினர்கள் என்பவர்களைக் கொல்லல் அல்லது காயப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இந் நடவடிக்கை கணிசமான மக்கள் மத்தியில் I. R. A. கொடூரமான இயக்கம் ,என்ற கருத்தினையும் தோற்றுவித்தது. இதேவேளையில் U. V. F.(ULSTER VOLANTEER FORCE)என்கின்ற புரட்டஸ்தாந்து இயக்கமும் மிகக்கொடூரமான முறையில் I.R.A. யின் நடவடிக்கைகளுக்கெதிர்நடவடிக்கையாக கத்தோலிக்க மக்களில் யாரையாவது கொல்லல் என்ற செயலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

I.R.A.யின் வயது கூடியதாகவிருந்தாலும் வளர்ச்சியென்பது மிகக்குறைவே.

பிரித்தானியக்கண்டத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த I. R. A. ஐரோப்பியக் கண்டத்தில் பிரித்தானிய நலன்களுக்கெதிரான தாக்குதல்களை 80களில் செறிவு படுத்திக் கொண்டது. ஜேர்மன், பெல்ஜியம், நெதர்லாந்து என்று I. R. A. யின் குண்டுத்தாக்குதல்கள், சுட்டுக்கொல்லல் என்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்தன. நடக்கின்றன. ======================:

www.padippakam.com

தேர்தல் பிரசாரங்களைச் சொல்ல லாம். ஒன்று தென் அயர்லாந்து -அயர்லாந்துக் குடியரசாகியதும் தென் அயர்லாந்திலிருந்து கிடைக்கக்கூடிய ஆதரவும் அனுதாபமும் குறைந்து போனமையும். இவர்களையாகவே தங்கள் சுதந்திரம் கிடைத்ததனால் வட அயர்லாந்து பற்றிய கவனம் குறைந்து போனமை-ஆரோக்கியமான வளர்ச்சிக்கான மக்களை கட்சி ரீதியாக அரசியல் மயப்படுத்தல். ஒன்று திரட்டல் வெறும் ஆயுதக்கவர்ச்சியைத் தனிப்பட்ட கொலைகள் மூலம் தொடர்வதை நிறுத்தல், அயர்லாந்துக் குடியரசிலும் மக்கள் ஆதரவைத்திரட்டல் என்பவற்றில் தவறியமையாலும், இன்னும் I.R.A. யினால் முழுமையான போராட்டத்திற்கான அமைப்பாக ஆக முடியவில்லை. 1969ம் ஆண்டில் I.R.A. கருத்து வேறுபாடுகள் கொண்டு இரண்டாகியது. ஒன்று I.R.A. உத்தியோகத்தர் (OFFICIALS) I.R.A. (முன்னவர்)கள் (PROVISIONALS) என்று இரண்டாவதும் பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டன. I.R.A. உத்தியோகத்தர் முழு அயர்லாந்தினையும் சேர்ந்த ஒரு சோசலிச நாட்டினை உருவாக்கல் என்பதிலும் I.R.A. (முன்னவர்) கள் வட அயர்லாந்தை. அயர்லாந்துக் குடியரசுடன் இணைத்தல் என்பதிலும் முனைப்பாகவுள்ளன. I.R.A. முன்னவர்கள் அமைப்பே இராணுவ நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. I.R.A. யின் நடவடிக்கை எப்படித் தொடர்கின்றபோதிலும், பெரும்பான்மை மக்கள் ஆதரவைப் பெறாமலும்

போராட்ட காரணிகள் சூழ் நிலைகளைப் புரிந்து அரசியல் மயப்பட்ட ஒரு ஆயுதப்போராட்டத்தை நடத்தாத வரையில் விடுதலை என்பது சாத்தியமில்லை. I.R.A. பிரித்தானிய அரசுக்குத்தலையிடியை மட்டும் கொடுக்க முடியும். இன்னும் இங்கு ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சி செய்தி எப்போதெல்லாம் வட அயர்லாந்தில் ஒன்றில் I.R.A. யின் நடவடிக்கையினால் யாராவது கொல்லப்பட்டிருப்பர். அல்லது U.V.F. இனரால் யாராவது கொல்லப்பட்டிருப்பர். இப்படியே ஒவ்வொரு நாட்கொலையாகவே வட அயர்லாந்துப்பிரச்சனை போய்க் கொண்டிருக்கிறது. இன்னொரு நிலைமை என்னவென்றால். வட அயர்லாந்தின் மக்களின் வாழ்க்கைத்தரம் அயர்லாந்துக் குடியரசு மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் பொருளாதா ரீதியாகப் பார்த்தால் மேலானதாகவே இருக்கிறது. விலைவாசி வரி வாழ்க்கைச் செலவு இருப்பிட வசதியின்மை என்பன அயர்லாந்துக் குடியரசில் உயர்வாகவுள்ளது. எனவே வட அயர்லாந்து பிரித்தானியாவிடமிருந்து விடுபட்டு குடியரசுடன் சேர்ந்தால் பொருளாதார ரீதியாகக் கஷ்டப்படவேண்டும் எனவும் பலர் வட அயர்லாந்திலும், குடியரசிலும் யோசிக்கின்றனர். ஆனால் இன்றைய அயர்லாந்துப் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணர்கள் பிரித்தானியர்களே.

எது எப்படியிருப்பினும். ஏகாதிபத்தியப்பிடியிலிருந்து விடுபட்ட சகல உரிமைகளும் அடங்கிய சொந்தச் சமூகத்தின் அரசினாலான ஒரு வாழ்க்கை வேண்டும். எனச்சிந்திக்கும் ஐரிஷ் மக்களின் விருப்பம் நியாயமானது. இன்னும் மேலாதிக்கத்திலிருந்து பிரச்சனைகளைத்தூண்டி விட்டு பிரித்தாளும் கொள்கையைக் கொண்டுள்ள ஆங்கிலேய அரசுக்கெதிராகப் போராடவேண்டிய கட்டாயம் நியாயமானது. ஆனால் போராட்டத்திற்கான பாதை, முறை, கொள்கை அரசியற் தெளிவு என்பன திட்டமிடப்பட்டுள்ளனவா? வளர்ச்சியடைந்துள்ளனவா? தற்போதைய நடவடிக்கைகள் பயனளிக்குமா? விடுதலைக்கு இட்டுச்செல்லுமா என்ற கேள்விகளுக்கு நிச்சயமாக-ஆம்-என்று பதில் கூறமுடியாது. போராட்டத்திற்கான சூழ்நிலைத்தடைகள் இருக்கின்ற போதிலும் அவைகளை உடைத்தெறிவதற்கான

---

**ஏகாதிபத்தியப்பிடியிலிருந்து விடுபட்ட சகல உரிமைகளும் அடங்கிய சொந்தச் சமூகத்தின் அரசினாலான ஒரு வாழ்க்கை வேண்டும் எனச்சிந்திக்கும் ஐரிஷ் மக்களின் விருப்பம் நியாயமானது. இன்னும் மேலாதிக்கத்திலிருந்து பிரச்சனைகளைத் தூண்டிவிட்டு பிரித்தாளும் கொள்கையைக் கொண்டுள்ள ஆங்கிலேயஅரசுக்கெதிராகப்போராடவேண்டியதுநியாயமானது =======**

---

www.padippakam.com

ந்,

சாணக்கியத்தோடு அரசியற்தெளிவு கொண்ட மக்கள் மயப்பட்ட போராட்டத்தை I.R.A , SINN FEIN நடத்தாத மட்டில் போராட்டமென்பது இன்னும்பல தலைமுறைகளை கடந்து செல்லும். எப்படியாயினும் போராட்டத்திற்கான நியாயத்தைப் புரிந்துகொண்டு, ஐரிஷ்போராட்டத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக குரல்கொடுப்பதும், ஐரிஷ் மக்களின் போராட்டத்தினை ஆதரிப்பதும் ஈழமக்களாகிய எமது சர்வதேசியக் கடமையாகும்.

## ரஞ்சனின்படுகொலையின்பின்னணியில்

ரஞ்சனின் படுகொலைக்குபின் பல்வேறு விதமான மாற்றங்கள் பல்வேறு அரங்குகளில் நிகழ்ந்துள்ளன. அரசு வட்டாரத்தில் நிகழும் உள் போட்டிகளின் விளைவே இது என ஊர்ஜிதமாகி வருகிறது. ஜோசிம் என்று அழைக்கப்படும் தாய்லாந்தைச்சேர்ந்த சர்வ தேசக் கடத்தல்காரன் கொழும்பில் ஆயுதங்களுடன் பாது காவலர்களை வைத்துச் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டான் இவன் இலங்கை மந்திரிகளுக்கு 40 தாய்லாந்துப்பெண்களை சப்ளை செய்துள்ளான். ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு 500கோடி ரூபாவுக்கு மேல் பணம் வழங்கியுள்ளான். ஹேமா பிரேமதாசாவின் 'சேவா வனிதா'விற்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை வழங்கியுள்ளான். அது மாத்திரமல்லாமல் முக்கியமான வைபவங்களில் முக்கியமான நபர்களுக்கான இருக்கைகளில் அவன் இருந்திருக்கிறான் கொழும்பு மாநகர சபையின் 125 ஆவது ஆண்டுவிழாவிலும், இலங்கை சுதந்திர தின வைபவத்தின் போதும் அவன் பிரதானமான ஆசனத்தில் அமர்த்தப்பட்டிருந்தான்.

இவன் தொடர்பாக ரஞ்சனுக்கும் பிரேமதாசாவுக்குமிடையே தகராறு உருவாகியது. ரஞ்சன் ஜே ஆரையும் அடிக்கடி சந்திப்பதுமுண்டு. ரஞ்சன் ஜோசிமை கைது செய்து நாடுகடத்தினார். அதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜோசிம் பற்றிய கேள்வியை பாராளுமன்றத்தில் எழுப்பிக்கொண்டிருந்தது.

இந்நிலையில் தான் கொழும்பில்வைத்து ரஞ்சன் விஜயம் செய்த வாகனத்தின்மீது குண்டு வைத்து படுகொலை செய்யப்பட்டார். சம்பவம் நடந்த இடத்தில் தாக்குதலின்போது உருவாகிய குழியை உடனடியாகவே மூடி விட்டார்கள். அவ்விடத்திற்கு அருகாமையிலிருந்த பொது மக்கள் ஒத்துழைக்க பயப்படுவதினால் விசாரணை நடத்துவதில் சிரமம் இருப்பதாக பொலிஸ் தரப்பு கூறுகிறது. இச்சம்பவம் தொடர்பாக ரஞ்சனின் மனைவி சு.க.கட்சித் தலைவியை சுதந்திர விசாரணைக்கமிஷன் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றுகோரியுள்ளார். இச்சம்பவங்களைத் தொடர்ந்து அரசு தரப்புக்குள் அனைத்துத்தரப்பினரும் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆணையை ஏற்று அமைதியுடன் செயல்பட முன்வந்துள்ளனர் என்று அரசியல் வட்டாரத்துக்குள் பரவலாக பேசப்படுகிறது.

கு.புத்திரன்

### உலகக்கண்ணாடி-4

## தொடரும்

## தேசியவாத எழுச்சிகள்

செக்கஸ்லோவாக்கியாவின் கிழக்குப் பகுதியான ஸ்லோவாக்கியாவில் வாழும் மக்கள் தாம் பிரிந்து தனி ராஜ்ஜியம் அமைப்பதற்கான ஆர்ப்பாட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் முப்பதுனாயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் ஸ்லோவாக்கியாவின் தலைநகரான பிராடிஸ்லாவாவில் 'சுதந்திர ஸ்லோவாக்கியாவே' என்று கோஷமிட்டவாறு தேசியக்குழுக்களின் பிரகடணத்தை சுலோகங்களாக தூக்கிப்பிடித்தனர்.

ஸ்லோக்கியாவில் வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படைத் தேவைகள் இன்னும் முழுமையாக பூர்த்திசெய்யப்படாமையினால் அரசுக்கெதிராக ஏற்பட்டிருக்கின்ற உணர்வுகளுக்காக போராடாது ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கான தேசியக்குழுக்கள் தேசிய வாத அரசியலை மக்கள் மத்தியில் வளர்த்து வருவதையே இவ்வார்ப்பாட்ட ஊர்வலங்கள் நிரூபிக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

# எமது பக்கம் எமது பக்கம் எமது பக்கம்

அன்பான வாசகர்களே!

'வெகு ஜனம்' சஞ்சிகைக்கு மூன்று வயது முடிந்து விட்டது. இந்த மூன்று வருடகால வளர்ச்சியிலும் நாம் சந்தித்த கஷ்டங்கள் ஏராளம். கருத்துக்களை எதிர் கொள்ளத்திராணியற்றவர்கள், சீரணிக்க முடியாதவர்கள் எம்மீது திட்டமிட்ட ரீதியாக மேற்கொண்ட, மேற்கொண்டு வருகின்ற சேறடிப்புக்கள் சதி முயற்சிகள்,மிரட்டல்கள் எத்தனை எத்தனை.

இவ்வகையான கஷ்டங்களுக்கும் மறு புறமாக வாசகர்களாகிய நீங்கள் தந்த முழுமையான ஆதரவும்,சில தோழமைச் சஞ்சிகை நண்பர்களின் ஒத்துழைப்புமே எம்மை இந்த கஷ்டமான கால கட்டங்களில் கூட உறுதி குலையாது நாம் எடுத்துக்கொண்ட பணியை இந்த வளர்ச்சி நிலைக்கு கொண்டு சென்றது.

நாம் எந்த சக்திகளிடமும் எந்த உதவியையும் பெறவில்லை. யாருக்குப்பின்னாலும் ஒளிந்துநின்றுகொண்டு தூய்மைவாத அரசியல்பற்றிப் பேசும் வீணர்களுமல்ல. மாறாக எமது சொந்த உழைப்பிலும்,வாசகர்களாகிய உங்களின் முழுமையான ஆதரவிலுமே எமது சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றோம்.

ஒரு சஞ்சிகையை அச்சேற்றி வெளியிடுவதில் உள்ள சிரமங்களும், அது மக்களிடம் சாதிக்க வேண்டிய பணிகள் போன்றவைகளை சஞ்சிகை வெளியிடும் நண்பர்களுக்கு நன்கு புரியும்.நாம் எமது சஞ்சிகையை ஆரம்பித்த காலகட்டம் மிகவும் சிக்கல் நிறைந்த அரசியல் சூழ்நிலைகளைக் கொண்ட காலகட்டமாக இருந்த போதிலும் நாமும் கும்பலிலே கோவிந்தா என்ற பாணியிலோ அல்லது காற்றடிக்கிற பக்கம் சாய்தல் என்ற போக்கிலோ எமது சஞ்சிகையை ஆரம்பிக்கவில்லை.

இலங்கைத் தீவில் இன்று இருக்கக்கூடிய பல்வேறு விதமான அரசியல் சூழ்நிலைகள், சமூகங்களுக்கிடையே புரையோடிப் போயிருக்கின்ற உள்முரண்பாடுகள் இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக உலகளாவிய ரீதியாக நாம் கொண்டுள்ள சித்தாந்தப் பார்வையின் அடிப்படையிலுமே எமது சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தோம்.

எமது போராட்டமானது இலக்குகளற்று மக்களின் இழப்புகள் அர்த்தமற்றதாகிய வேளையிலேயே இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்னும் போர்வைக்குள் எமது பிரச்சனையில் இந்தியாவின் நேரடித்தலையீடு ஏற்பட்டதும்,அதைத்தொடர்ந்து புலிகளின் அதிகாரப் போட்டியினால் இந்தியப்படைக்கும் -புலிகளுக்குமிடையில் உருவாகிய யுத்தத்தினால் எமது மக்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டும் இலட்சக்கணக்கில் எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டும் இருந்த நிலையிலும் கூட நாம் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் படுத்தப்பட வேண்டும் அதனூடாகவே ஸ்ரீ லங்கா பேரினவாத அரசின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்துவதுடன் மக்களுக்கு ஒரு இடைக்கால அமைதி உருவாகலாம் என்ற அடிப்படையில் நாம் உறுதியாக ஆதரித்து எழுதினோம்.அதை ஆதரிக்கும் சக்திகளுக்கும் எமது ஆதரவுகளைத் தெரிவித்து எழுதினோம்.

எமக்கெல்லாம் திண்ணைப்பேச்சுக்களில் துளிகூட நம்பிக்கை கிடையாது. பேசுவதைவிட சாதிப்பதே சாலச்சிறந்தது.ஏதோ ஒரு மூலைக்குள் இருந்து குசு குசுப்பதின்மூலம் ஏதோ புரட்சியை நடாத்திக் கொண்டிருக்கின்றோம் என்ற கற்பனையிலும் நாம் மிதக்க விரும்பவில்லை.இன்று இருக்கக்கூடிய போராட்ட சக்திகளை நிராகரிக்கின்றோம் என்ற போக்கில்ஏற்படும் இடைவெளியை சரி செய்வதற்கு .
எந்தவித மாற்றுத்திட்டமுமில்லாது மக்களைத் தொடர்ந்து அழிவுக்கு முகம் கொடுக்கவைக்கும் பாதகச் செயலுக்கு நாம் எப்போதும் துணைபோக எழுத மாட்டோம். மாறாக இன்று இருக்கக்கூடிய யதார்த்தமான சூழ்நிலைகளைக் கணக்கிலெடுத்து எமது மக்களின் உடனடிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழி வகைகளுக்கு நாம் முழு

படிப்பகம்

www.padippakam.com

முழுமையான ஒத்துழைப்பையும்.ஆதரவையும் தொடர்ந்தும் கொடுத்து எழுதுவோம். அதனூடாக மக்களின் சுதந்திரமான கருத்துக்களின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுப்பதே சாலச்சிறந்தது என்பது எமது முழுமையான நிலைப்பாடாகும்.

சமூக மாற்றமும் தேசிய விடுதலையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை.தனித்துத் தேசிய விடுதலையை வென்றெடுப்பது என்பது இன்றிருக்கும் சூழ்நிலையில் யதார்த்தத்திற்குப் புறம்பானது.ஆகவே சமூக மாற்றத்திற்கான வளர்ச்சிப்போக்கிலேயே தேசியப்பிரச்சனையின் இறுதி வெற்றி தங்கி நிற்கின்றது. இதன் பின் விளைவுகள் இலங்கைத் தீவிலுள்ள முற்போக்கு சக்திகளின் ஐக்கியத்திற்கு வழி வகுக்கும் என்பதே உண்மையாகும்.அதன் அடிப்படையிலேயே எமது செயல் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

பெண் ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டம் என்பது பெண்கள் அரசியல் அறிவுகளுக்கு அப்பாற்பட்டு வெறுமனே ஆயுதம் ஏந்துவதோ,அல்லது குருட்டுத்தனமாக ஆண்களுக்கெதிரான உணர்வுகளை, கருத்துக்களை பிரதிபலிப்பது பெண் விடுதலைக்கான போராட்டமாகாது என்பதில் தெளிவு படைத்தவர்களாக இருக்கின்றோம். இவைகள் எல்லாம் மத்திய தர வர்க்க குணாம்சம் கொண்ட பெண்களிடம் இயல்பாக உள்ளவை.பெண் விடுதலைக்கான போராட்டமும் உழைக்கும்வர்க்கத்தின் விடியலுக்கான போராட்டமும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவை. ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற சமூக மாற்றத்திற்கான போராட்டங்களின் பிரிக்க முடியாத ஒவ்வொரு அலகுகளே.இவைகளைப் போன்றுதான் சாதி ஒடுக்குமுறை,பிரதேசவாதம் போன்ற பிற்போக்குவாத காரணிகளுக்கெல்லாம் தீர்வாக சமூக மாற்றத்திற்கான போராட்டமே வரலாற்றின் தேவையாக இருக்கின்றது என்பதில் நாம் உறுதி படைத்தவர்களாக இருக்கின்றோம்.

எமது தேசத்திலிருந்து அரசியல் காரணங்களாலும் பொருளாதாரக் காரணிகளாலும் புலம் பெயர்ந்துள்ள எமது மக்கள் மத்தியில் மேற் கொண்டுவரும் பிற்போக்கு வியூக அரசியல்,போலியான கடதாசிப் புரட்சியாளர்களின் கலைப்புவாதக் கருத்துக்கள் போன்றவற்றிற்கு ஆட்படாது ஒரு முற்போக்கான சிந்தனையை வளர்த்தெடுப்பதற்கும்,முற்போக்கு சிந்தனை கொண்டோர் ஆங்காங்கே உதிரிகளாக அந்நியப்பட்டு செல்வதைத் தடுப்பதும் அவ்வகையான சக்திகளுக்கு சரியான திசையை,பார்வையைக் காட்டுவதற்கும் அவர்கள் தமது ஆற்றல்களை செழுமைப்படுத்திக் கொள்வதற்கான களமாகவும் வெகுஜனத்தை பாவிக்கலாம் என்ற வகையிலும் நாம் புலம் பெயர்ந்துள்ள தேசத்தினில் 'வெகுஜனம்' சஞ்சிகையை வெளியிட வேண்டிய தேவையும் எமக்கு ஏற்பட்டது. அதில் குறிப்பிடக்கூடிய அளவு வெற்றியும் கண்டுள்ளோம்.மேலும் இவ்வளர்ச்சியை உயர்ந்த கட்ட நிலைக்கு கொண்டு செல்வதில் ஆசிரியர் குழுவினராகிய எம்மீதும் பெரும் பொறுப்பு இருக்கின்றது என்பதை நாம் முழுமையாக உணர்கின்றோம்.

கடந்த காலத்தில் எமது சஞ்சிகையை உரியகாலத்தில் வெளிக்கொண்டு வர முடியாமல் போனதை பெரும் குறைபாடாகவே கருதுகின்றோம். வித்தியாசமான சூழலில் வாழும் எமக்குள் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்களும் நிதி நெருக்கடிகளுமே காரணமாக அமைகின்ற போதிலும் இவற்றுக்கான பரிகாரங்களை முழு முயற்சியுடன் தேடமுயல்வோம் என்பதை உறுதியுடன் கூறுகின்றோம்.அதே வேளை வாசகர்கள் தோழமைச் சஞ்சிகை நண்பர்கள் ஆகியோரிடமிருந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் தோழமையுடன் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஆ-கு.



படிப்பகம்

www.padippakam.com



ஆசிரியர் அவர்கட்கு !

ஐரோப்பாவில் பல பத்திரிகைகள் வெளிவருகிறது.ஆனாலும் அப்பத்திரிகையில் உண்மைகளை ஊமைகளாக்கி வெறும் முண்டங்களைப்போல் வருகிறது.சில பத்திரிகைகள் அழிந்துகொண்டிருக்கும் எமது மக்களுக்கு இன்றைய தேவை என்னஎன்பது பற்றி எந்தவித கவலையுமில்லாமல்.ஒரு தீர்வைக்கூட முன்வைக்காமல் பொழுது போக்கு பத்திரிகைகள் நடாத்திக்கொண்டிருக்கிறார்கள்.சிலர் எல்லா இயக்கங்களையும் திட்டித் தீர்த்து நல்ல பிள்ளை பேர் எடுக்கவும் பிரச்சனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவும்,தங்களை விடுதலையில் பற்றுள்ளவர்கள் என்று காட்டவும், முற்போக்குவாதியாகக் காட்டிக்கொள்ளவும் எழுத்து வியாபாரம் செய்துகொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஒரு தீர்வைமுன்வைத்து உறுதியுடனும்,துணிவுடனும் எழுதுகின்ற உங்கள் பத்திரிகை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

பத்திரிகையின் அமைப்பு வடிவத்தில் கூடிய கவனம் செலுத்தினால் இன்னும் அழகான இதழாக இருக்கும்.

அன்ரனி.
(பிரான்சு)

பெப்ரவரி-மார்ச் 91 வெகுஜனத்தில் வெளிவந்த 'சுருதி பேதம்' எனும் குறு நாவல் சிறப்பாக இருந்தது.எமது சமுதாயத்தில் இருந்து சாதி ஒடுக்குமுறை விடைபெற்றுச் சென்று கொண்டிருக்கின்றது என்பதையும்,காலத்தின் மாறுதல் வரட்டுக் கௌரவங்களும்,மூட நம்பிக்கைகளும்,பழமை வாதங்களும் வலுவிழந்து செல்கின்றனஎன்பதையும் அக்கினி தெளிவுபடுத்தியுள்ளார்.சாதி ஒடுக்கு முறை எப்போது தீரும் என ஏங்கித் தவிப்போருக்கு எமது இளைய சமுதாயம் விரைவில் பதில் சொல்லும் என்பதனையும் சுருதி பேதம் மூலமாக 'அக்கினி' தெளிவுபடுத்தியுள்ளார்.

அக்கினிக்கு எனது பாராட்டுக்கள்.

'என்றும் நினைவில் சொய்சா... 'சொகுசான வாழ்க்கை வாழ்வோருக்கு சிம்ம சொப்பனம் தான்.ரி.தாசனின் ஓவியமும் எடுப்பியுள்ளது.

உங்கள் பக்கத்தினூடாக என்.விஜயலட்சுமி ஜேர்மனியில் ஈழத்தவரின் அவலநிலையை வெளிப்படுத்தியுள்ளார்.சிலர் சொல்கிறார்களாம் புலிகள் தான் இன் நாட்டு மன்னர்கள் என்று .ஆம் .உண்மைதான்.பணம் படைத்த முதலாளித்துவ, நடுத்தர வர்க்கத்தின் வீர மைந்தர்களே அதிகமாகப் புலிகளில் இருக்கிறார்கள். நாம் இங்கு பகுதி நேர வேலை செய்வது போல் அவர்கள் ஈழத்தில் கூடியது ஒரு வருடம் வீரவேங்கையாக இருந்து விட்டு,தமது சொத்தின் உதவியுடன் இங்கு வந்து விடுகிறார்கள். ஆனால் மற்றைய இயக்கங்களில் அதிகமாக இருப்பவர்கள் பாட்டாளிவர்க்கத்தினரே இழப்பதற்கு எதுவுமற்றவர்கள்,அன்றாட உணவுக்கே அவஸ்தைப்படுபவர்கள். அவர்களால் எப்படி இங்கு வர முடியும்.இப்படிப்பட்டவர்களுக்குத்தான் விடுதலை வேண்டும். இவர்களால் ஜேர்மனியில் ஆட்சி செய்ய முடியாது இதற்கு விரும்பவும் மாட்டார்கள் இன்நாட்டு(ஜேர்மன்) மன்னர்களுக்கு ஈழத்தில் என்ன விடுதலை வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட உண்மைகளையும் எம்மவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றால் சந்தோசப்பட வேண்டியதே.

விஜயலட்சுமி ஒன்றைத்தவற விட்டுவிட்டார். இங்கு றெஸ்ரோரன்களில் களவாக வேலை செய்யும் ஈழத்தவர்,வீர வேங்கைகளுக்குத் திறை செலுத்தாவிட்டால் தொடர்ந்தும் களவாக வேலை செய்யமுடியாத நிலை சில இடங்களில் ஏற்படுகிறது.

ஜேர்மன் அரசுடன் புலிகள் நல்லுறவை வளர்க்கிறார்கள் போலும்.எது எப்படியிருப்பினும் 'மாறுதல் வருமென்பதில் மாற்றமில்லை' என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும். வெகுஜனத்தில் வெளியான மற்றைய பகுதிகளும் நன்றாக இருந்தன. வெகுஜனம் மேலும் சிறப்படையட்டும்.

முகிலன்.
(கனோபர்)


படிப்பகம்

www.padippakam.com

# என் சிந்தனையில்

பீற்றர் குலம்.

இன்று இலங்கையிலும்சரி இந்தியாவிலும்சரி தமிழீழப் போராட்டம் பற்றி சரி
யாகபுரிந்து கொள்ளாத நிலையில் பலர் இப்போராட்டம் பற்றி தமது இஷ்டப்படி
விமர்சனம் செய்வதையும்,பிரச்சாரம் செய்வதையும் காணமுடிகிறது.இயக்கத்தலை
வர்களும் சரியான போராட்ட வரலாறுகளை தமது போராளிகளுக்கு குறிப்பாக
விடுதலைப்புலிகள் தலைமை விளக்கத்தவறியமையை காணக்கூடியதாக இருக்கிறது.
அதேவேளையில் அரசியல் சித்தாந்தங்களையும் கற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர்.

ஒவ்வொரு போராளியும் தாம் சார்ந்த தலைவர்கள்தான் போரா
ட்டத்தை ஆரம்பித்ததாக என்னுகின்றனர்.இது முற்றிலும் மாறானதே. இயக்கங்களின்
ஆதரவாளர்கள் கூட அப்படித்தான் கருதுகின்றனர்.இன்னும் சொல்லப்போனால் விடு
தலைப்புலிகள் தலைமை தங்கள் அங்கத்தவர்களுக்கு போராட்டம் எப்போ,யாரால்
எப்படி ஆரம்பிக்கப்பட்டது,இதில் யார் யார் எப்படி தங்களை ஈடுபடுத்தினர் என்
பது கூட புரியாத நிலையில் இன்று ஆயுதங்களை சின்னஞ்சிறுசுகளின் கைகளில் கொ
டுத்து அவர்களின் வாழ்வை சின்னாபின்னப்படுத்தும் புலிகள் தலைமை அவர்களுக்கு
வழிகாட்டத்தவறிவிட்டது.

இன்று புலிகளின் தலைமையின் கீழ் ஆயிரமாயிரமாக அணிவகுத்துச் செல்லும் பெண்
கள் ஏராளம்.எமது போராட்டத்திற்கு இன்று தெளிவான பாதை எமக்கு அவசியம்.
விடுதலைப் போராட்டம் என்பது நீண்டகால வரலாற்றைக் கொண்டது.இதில்பெண்
களின் பங்களிப்பு மிகமிக முக்கியம்தான். உலகப் போராட்டத்திலே பெண்கள்
முன்னணியில் திகழ்ந்தார்கள்.கடைசியில் அவர்கள் அடுப்பங்கரைக்கும் படுக்கைய
றைக்கும் மீண்டும் அனுப்பப்பட்டார்கள்.இதற்கு ஈரானில் கொமெனியின் தலைமை
யில் நடைபெற்ற ஷாமன்னனுக்கெதிரான இஸ்லாமியப் புரட்சியென வர்ணிக்கப்
பட்ட போராட்டமே போதுமானதாகும்.

இதேபோன்று எம்நாட்டில் விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ்தான் பெண்கள்
அணிவகுத்து செல்கின்றனர்.இன்று பெண்கள் போராட்டத்தில் கலந்து கொள்வதை
யும் எமது மொழிக்காக,மண்ணுக்காக,சுதந்திரத்துக்காக போராடுவதையாருமே
தடுக்கமுடியாது.ஆனால் இவர்கள் புலிகளின் தலைமையின்கீழ் அணிதிரள்வது மிகவும்
வேதனையாகத்தான் இருக்கின்றது.

காலாச்சாரத்தைப்பற்றி அறிவுறுத்தும் புலிகள் தலைமை அங்கு பெண்களைத்தான்
குறியாக பார்க்கின்றனர்.எமது பெண்கள் ஒன்றை சிந்திக்க வேண்டும் நாளை நீங்
கள் இந்தத் தலைமைக்கு எதிராகவும் போர்க்கொடி தூக்க வேண்டிய துர்ப்பாக்கி
ய நிலைமை உருவாகும்.எமது மக்களின் சுதந்திரத்திற்காக புலிகளின் தலைமை
யின் கீழ் துப்பாக்கியேந்திய பெண்களே நாளை எமது சமூகத்திலிருந்து நீங்கள்
விடுதலை பெற உங்கள் துப்பாக்கிகளை பத்திரமாக பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
கலாச்சாரத்தைப்பற்றி கொக்கரிக்கும் உங்கள் தலைமைக்கு நீங்கள் பதில் சொ
ல்லியாகவேண்டும்.அப்போது உங்களோடு எங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள்

எதுவித தெளிவுமற்ற புலித்தலைமைகளை புகழ்பாடுவது இங்குள்
ளவர்களின் கடமையாகி விட்டது.இவர்களை திருத்தவே முடியாது.காலம் இவர்களு
க்குப் பதில் சொல்லியாகும்.இயக்கங்களில் புலிகளின் தலைமை அரசியல் தெளிவற்
ற பார்வையைக் கொண்டதென்பது உண்மை.தங்களுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு தாங்
கள் தான் முதலில் போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் என்றும் இதில் யார் யார்
எப்படி தங்களை ஈடுபடுத்தினர் என்பதை விளக்கத்தவறிவிட்டனர். தமிழ் தேசிய
இனப்போராட்டத்தில் இலங்கை தமிழ் காங்கிரஸ்,தமிழரசுக்கட்சி,தமிழர் விடுத
லைக் கூட்டணி ஆகிய மிதவாதக் கட்சிகளின் பங்களிப்புக்களையும் திருவாளர்
எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களைப்பற்றி கூட புரியவைக்காதநிலையில் புலி
களின் தலைமை செயல்பட்டுவருகின்றது. இது எதிர்கால சந்ததிக்கு கட்டாயம்
தெரியவேண்டியவை.அவைகளைத் தெரியாமல்,படிக்காமல் எவரும் சரியான பார்
வையை பெறமாட்டார்கள்.இந்தத் தெளிவான பார்வையில்லாமல் தான் இன்று நாட்



படிப்பகம்

எல்லையுமே அழிந்துகொள்ளும் நிலை தொடர்கின்றது.

இன்று சிலர் போராட்டவரலாறுகளைப்பற்றி சரியான தெளிவான கண்ணோட்டமில்லாது தாங்கள் தான் அறிவுஜீவிகள், நாட்டுப்பற்றுள்ளவர்கள், நாவும் தெரிந்தவர்கள் என்றெல்லாம் தங்களுக்குத்தாங்களே தம்பட்டமடிக்கின்றனர். வெவ்வேறு விதமான வார்த்தையாலங்களினால் வரண்ட பேச்சுக்கள். இவர்களின் வேஷங்கள் எல்லாம் எமக்குப் புதிதல்ல. நாற்பது ஆண்டுகால அகிம்சைவழிப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக பரிணமித்தது தோழர் சிவகுமாரனால் என்பதை மறந்து விட்டார்கள். இப்படிப்பட்ட வரலாற்றுப் போராட்டம் இன்றும் அரசியல் கட்சிகளும், தோழர் சிவகுமாரனின் நினைவுகளும் எம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கின்றது. அவர்களின் கனவுகள் இன்று மழுங்கடிக்கப்பட்டு விட்டது. எந்தநோக்கத்திற்காக ஆயுதம் ஏந்தினார்களோ அவைகள் அனைத்தும் கலைக்கப்பட்டுவிட்டன. இந்தக் கீழ்த்தரமான செயல்களுக்கு முன்நின்று வித்திட்டவர்கள் தெளிவற்ற பிற்போக்கு எண்ணம் கொண்ட புலிகளின் தலைமையே. இந்தத் தெளிவற்றவர்களின் செயல்களால் இன்றும் எம் நாட்டில் அமைதியில்லை. தமிழினத்திற்கு அமைதியே இல்லை. இப்படிப்பட்ட செயல்களால் அந்நிய சக்திகளுக்கு ஆதரவாக சில போராளி அமைப்புக்கள் செயல்பட்டதும், அந்நிய சக்திகளின் ஆதரவில் அவர்கள் தங்கிநிற்கும் நிலைமை ஏற்பட்டதும் துரதிஷ்டம்தான். இவர்களுக்குள் ஏற்பட்ட மோதல்களும், அழிவுகளும் மேலும் வலுவூட்டின.

புலிகள் நேர்மையானவர்களா? இவர்களும் அந்நிய ஏகாதிபத்தியத்தினதும் இலங்கை அரசினதும் ஆதரவில் தங்கி நின்றமை எமக்கு தெரியாததல்ல. இவர்கள் மட்டுமா தியாகம் செய்தார்கள்? அல்லது இவர்களுக்கு மட்டும்தான் தியாகமா? தமிழீழப் போராட்டம் தமிழ் மொழியைப் பேசுகின்ற ஒவ்வொருவருக்குமுரிய போராட்டமே. புலிகளுக்கு மாத்திரமல்ல. எத்தனையோ போராளிகள், மக்கள் தியாகம் செய்யவில்லையா? அன்று அகிம்சைப் போராட்டம் நம்பிக்கையிழந்ததைத் தொடர்ந்து எழுபதுகளுக்குப்பிற்பாடு சிவகுமாரன் சிறை பிடிக்கப்பட்டதை தமிழினம் மறந்து விட்டதா? அவன் தியாகம் செய்ததை புலிகள் மறந்து விட்டனர். போராட்ட வரலாற்றை நாம் சிறிதளவாவது தெரிந்து கொள்ள பழகியிருக்க வேண்டும். இல்லையேல் புலிகளுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம். புலிகள் இயக்கம் என்றுமே எதிலுமே தவறு செய்யவில்லையென யாராவது சுட்டிக்காட்டுங்கள் பார்க்கலாம். அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுடன் இரகசியமாக பேசியது தவறு என விமர்சிக்கப்பட்டது. வாக்குறுதியை நம்பி தமிழ் மக்களுக்கு துரோகம் இழைப்பதாக கூறப்பட்டது. கூட்டணியினர் துரோகிகள், மற்றைய போராளி இயக்கங்கள் துரோகிகள் இப்படிப் புலிகளால் பேசப்பட்டது. அப்படியானால் புலிகள் தான் நேர்மையானவர்கள் என்று யாரும் கூறிவிட முடியாது. தங்கள் நலன்களுக்காக பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தவர்கள் புலிகள். இது இங்குள்ள பலருக்கு தெரியாமல் இருக்கலாம். இப்படிப்பட்ட புலிகளின் துரோகங்களையும் போராட்ட வரலாறுகளையும் அறிந்து இங்குள்ளவர்களுக்காக இந்தப் படைப்பை 'வெகுஜனம்' மூலம் வாசிப்பதையிட்டும், விமர்சிப்பதையிட்டும் தெளிவு பெற்ற மனிதர்களாக தங்களைத் திருத்திக்கொண்டு செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

---

உலகச் செய்திக் கண்ணாடி - 2

## வளைகுடா பாதுகாப்புத்திட்டம்

வளைகுடாப்பிராந்தியத்தின்பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிரியாவும் மற்றும் ஏழு அரபு நாடுகளும் தமக்கிடையில் வளைகுடாவுக்கான பாதுகாப்புத்திட்டம் ஒன்றை வரைந்துள்ளன.

டமாஸ்கஸில் கூட்டப் பட்ட

பாதுகாப்புத்திட்டம் தொடர்பாக அரபுநாடு இல்லாத ஈரான் கருத்துத் தெரிவிக்கையில் வளைகுடாப் பாதுகாப்பு நிச்சயமாக இப்பகுதியிலுள்ள நாடுகளின் பொறுப்பே முக்கியமானதாகும் என்றும் ஈரானின் விஸ்திரமான பகுதியையும், அதன் ஐந்தரைக் கோடி மக்களையும் அதன் பலமான ஆயுதப் படையையும் வளைகுடா பாதுகாப்புத் திட்டத்தை வரைந்த நாடுகள் கவனத்திலெடுக்கவேண்டும் என்றும் ஈரான் விரும்புகின்றது.

www.padippakam.com

# இரண்டாவது பிறப்பு

## கவிதைத்தொகுப்பு மீதான பார்வை

நேசன்.

ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம் (அனா) வெளியிட்டிருக்கும் "இரண்டாவது பிறப்பு" என்னும் கவிதைத் தொகுப்பானது ஐரோப்பிய புகலிட இலக்கியங்களுக்குள் குறிப்பிடக் கூடிய அம்சமாக வெளிவந்துள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் மக்கள்மத்தியிலிருந்து வெளிவந்திருக்கும் "இரண்டாவது பிறப்பு" கவிதைத் தொகுப்பானது அருந்ததியின் கவிதைகளையே தாங்கிநிற்கின்றது.

"இரண்டாவது பிறப்பு" கவிதைத்தொகுப்பினில் சமூகப் பிரச்சனைகளை, அதுவும் சமகால நிகழ்வுகளை,மக்களின் துயரங்களை தூர நோக்கிய சிந்தனையுடன் பார்க்கின்ற தன்மையையும் இக்கவிதைகளினூடாக அருந்ததியினிடம் காணக் கூடியதாகவிருப்பது நல்ல ஒரு அம்சமாகும்.

"பள்ளிவாசல்"

என்னும் கவிதையினூடாக காத்தான்குடிப்பள்ளிவாசலுக்குள் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இஸ்லாமியத் தமிழர்கள்மீதான புலிகளின் அநாகரீகமான படுகொலையைப் பார்த்து அருந்ததி இப்படிக் குறிப்பிடுகின்றார்.

காத்தான் குடிப்
பள்ளிவாசலில்
எங்கள் மாடுகக்
கனவுகள்
அழிந்தன.

என்று குறிப்பிடும் அருந்ததி அதே கவிதையில் சமூகத்தின் ஒற்றுமைக்காய் கொடுத்தவாக்குறுதியை எப்படிக்காப்பாற்றப்போகின்றான் என்று ஆதங்கப் படுவது குறித்து அவர் இப்படிக் கூறுகின்றார்.

மதத்தால் வேறு படினும்
இனத்தால்,மொழியால்
ஒன்றென்றுரைத்த
உமது மனிதரெல்லாம்
எங்கே ஒளிந்தனர்

என்ற
"நசீம்"காதரின் கேள்விக்கு
நல்லசிவம் எந்த முகத்தோடு
பதிலை உரைப்பது

என்று ஆதங்கத்துடன் இப் படுகொலையைப் பார்க்கின்ற அருந்ததி,நாம் எல்லாம் மனிதப்பண்புகளை தொலைத்துவிட்ட தமிழ் சமூகமாக உலகிற்கு இப்படியான சம்பவத்தினூடாக அம்மணமாகிப்போன நிகழ்வுகளை ஞாபகப்படுத்துகின்றார்.

"வருக வருக தோழர்களே"

என்ற கவிதையினூடாக மக்களின்,தேசத்தின் மீதான நேசத்தையும், அக்கறையையும் அருந்ததியிடம் காணக்கூடியதாகவிருக்கின்றது.புலம் பெயர்ந்த தேசத்தினில் மித மிஞ்சிய பொருளாதாரத் தன்னிறைவுகளுடன் வெறுமனே தத்துவார்த்தமான பேச்சுக்கள்,நடிப்புக்கள்,மக்களின் அழிவுகளினூடாக தங்கள் சார்பு நிலை அரசியலை மேற்கொள்ள முயலும் மேதாவிகளுடன் அருந்திக்கு ஏற்பட்ட பரீட்சையமான கருத்துப்பரிமாறல்களினூடாக அவருக்குக்கிடைத்த அநுபவத்தை வைத்து இக்கவிதையை அருந்ததி எழுதியுள்ளார் போல் எண்ணத்தோன்றுகின்றது.

சகோதரிக்குப் பார்த்த
இஞ்சினியர் மாப்பிள்ளைக்கு
சீதனத்துக்காக
ஐம்பதினாயிரத்தை
தாபல்கந்தோர் ஊடாக அனுப்பிவிட்டு
காலாற நடந்து வரும்போது
சீதனக் கொடுமையால்
வட இந்தியாவில்
தீய் மூட்டிக் கொல்லப்பட்ட
பெண்களைப் பற்றியும்,
யாழ்ப்பாணத்தில்
சீதனம் இல்லாமல்
முதிர்ந்து கொண்டிருக்கும்
கன்னியர்களைப் பற்றியும்
கவலையோடு
விரிவாகக் கதைத்ததும்
யாருக்கு வரும் இந்த சமூக பிரக்ஞை?

www.padippakam.com

என்று இந்தச் சமூகப் புரட்சியாளர்களுக்கு சாட்டையடி கொடுக்கிறார் அருந்ததி. ஆம் நனைகின்றது என்று ஒரு நாய் அழுத கதையாக இந்தப்போலிகள் மத்திய தர வர்க்க குணாம்சத்திலிருந்து விடுபட முடியாது தத்தளிக்கும் போக்கையும், மறுபுறமாக போலியாக சமூக மாற்றத்திற்கான கருத்துக்களில் ஈடுபடுவதையும் இப்பிரச்சினைகளை யதார்த்த பூர்வமாக சிந்திக்க மறுக்கும் தன்மையையும் அம்பலப்படுத்தி மேலும் தொடர்கிறார்.

குடியேறி விட்ட பின்னும்
தேசத்தை மறந்து விடாமல்
மக்களுக்கு ஓய்வு தேவையில்லை
அவர்கள் போராட வேண்டுமென்று
கதைத்தலும் ...............
யாருக்கு வரும் இந்த சித்தாந்த அறிவு

என்று கேள்வி எழுப்பும் அருந்ததி இந்தப்போலிகள் மக்களின் இழப்புக்களின், தேசத்தின் அழிவுகளில் அக்கறை இல்லாத போக்கையும் இவ்வகையான அனர்த்தங்களிலிருந்து குளிர் காய நினைக்கும் துரோகத்தனத்தையும் அதன் அரசியல் போக்கையும் அம்பலப்படுத்தி மேலும் தொடர்கிறார்.

வறுமையிலுள்ளவர்களுக்கு
சாப்பாடு போடுவது பிழை
அது அவர்களது
போராட்ட உணர்வையே
மழுங்கடித்துவிடும்

என்ற கவிதை வரிகளை உற்று நோக்கிப்பார்க்கின்ற வேளையில் எல்லா வகையான அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் வரட்டுத்தனமான தமது சிந்தனைகளை தத்துவம் என்னும் போர்வைக்குள் மனிதாபிமானத்தையே இழந்து விட்ட இவர்கள் ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பேண முயலும் புத்திஜீவிகளின் வரிசைக்குள் அடக்கப்பட வேண்டியவர்கள் என்பதை அருந்ததி இக்கவிதை வரிகளினூடு எமக்கு ஞாபகப்படுத்தி மேலும் தொடர்கின்றார்.

நாட்டில் இருந்து என்னத்தை
செய்து கிழிக்கிறார்கள்
எம்மைப்போல
அறிவான விசயங்களையா
பேசுகிறார்கள்

என்ற போலிகளின் கேள்விகளுக்கு இப்போதும் எம்தேசத்தினில் அறிவானவர்களும், அறிவான விடயங்களைப் பேச ஆர்வமுடையவர்களும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் சூழல் தான் இதற்கு சாதகமாகவில்லை. அவர்கள் ஒரு ஜீவமரணப் போராட்டத்தையே தினம் தினம் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் அப்படியான சூழலிலா வாழ்ந்து கொண்டிருக்கிறோம்(?) என்ற பாணியில் மேலும் தொடர்கிறார் அருந்ததி.

நாம்
பேசுவோம்
நிறையப் பேசுவோம்
தத்துவம்
அரசியல்
கலை
இலக்கியம்
இன்னும் இன்னும்
புத்தகம்
அருந்த நல்ல பானமும்
இன்னும்
எல்லாமிருக்கிறது
தோழர்களே வருக வருக.

**'எதிரிகளில்லாதவர்கள்'** கவிதையினூடாக தேசத்தின்விடியலுக்காக போராடப் புறப்பட்டவர்களிடையே தோன்றிய முரண்பாடுகளை தொண்டைக்குழாய்களினூடாக மட்டுமே பேச வேண்டும் என்பதை மறந்து கொலைக் கருவிகளினூடாக பேச முற்பட்டதன் விளைவாக உருவாகிய கொலை வெறியை, மனித நேயத்தை இழந்து விட்டதை இக்கவிதையினூடு சொல்ல முற்பட்டிருக்கிறார் அருந்ததி.

அடுத்த வீட்டில் மூத்தவன்
தன் தம்பியின் கழுத்தை நெரித்துக்
கொலை செய்து கொண்டிருந்தான்
இன்னொரு வீட்டில் ஒருத்தன்
தன் தாயின் கைகளைக்
கத்தியால் வெட்டிக்கொண்டிருந்தான்.

என்று குறிப்பிடும் அருந்ததி இக் கொடூரங்களை எல்லாம் வளர்த்து விட்டது தவறு என்று இப்போது கலங்குவதில் என்ன பயன். அன்றே சிந்தித்திருக்க வேண்டும் என்று மேலும் தொடர்கிறார் அருந்ததி

எதை நினைத்து அழுவது ?
யாரைக் குறித்துக் கலங்குவது ?

www.padippakam.com

வீட்டுக்குள்
பாம்புப் புற்றை வரவிட்டு
'நாக பூசை' நடாத்திப்பார்த்ததை
அறிவீனம் என்று
இப்பொழுது சொன்னால் எப்படி ?.

"இரண்டாவது பிறப்பு" கவிதைகளினூடாக எமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் பிற்போக்கான அம்சங்களையும், மக்களிடம் காணப்படும் சயறலவாத நோக்கினால் அநீதிகளை எதிர்த்து நிற்கின்ற தன்மை யிழந்து கொலைக் கலாச்சாரத்திற்கு துணையாக சென்ற போக்கையும் அம்பலப்படுத்துகிறார் அருந்ததி.

வாழ்க்கையை
ஆற்றிலே தொலைத்து
குளத்திலே தேடும் சுந்தரர்களாம்
இரண்டாவது பிறப்பெடுக்கத்
தற்கொலை புரிந்தவர்கள்.

என்று குறிப்பிடும் அருந்ததி எமது சமூகம் எவ்வித பலன்களையும் பெற முடியாத கற்பனையில், எதிர்பார்ப்புக்களுடன் வாழும் சமூகமாக வாழ்ந்தும் காட்டும் மிராண்டித்தனத்தின் ஓட்டம் மொத்த உருவமாக எம் சமூகம் மாறி வருவதையும் அருந்ததி மேலும் குறிப்பிடுகிறார்

கண்களை விற்று சித்திரம் வாங்கி
காட்சிப் பொருட்களாய்
நாமே மாறி
உலகமெங்கிலும்
உரக்கவே சொல்கிறோம்
வந்து பாருங்கள்
வந்து பாருங்கள்
இந்த நூற்றாண்டில் வாழும்
மூத்த பெரும்
பழங்குடிகள் நாங்கள்.

என்று குறிப்பிடும் அருந்ததியின் பார்வை மிகவும் விசாலமாக காணப்படுகின்றது. சமூகத்தின் உள் முரண்பாடுகளையும் பிரச்சினைகள் தொடர்பான ஆழமான அணுகு முறைகளையும் வேண்டி நிற்கும் அருந்ததியின் 'இரண்டாவது பிறப்பு' கவிதைத் தொகுப்பினில் மொத்தமாக பதினொரு கவிதைகள் இருக்கின்றன. நான் இத்தொகுப்பினில் சில கவிதைகளையே பார்த்துள்ளேன். இக் கவிதைத் தொகுப்பினூடு அருந்ததியின் பார்வைகள் அதிசிறப்பாக பதிந்துள்ள இடங்களை மட்டுமே நான் தொட்டுச் சென்றுள்ளேன்.

இன்றைய எழுத்துலகில் எழுத்துக்கும் நடை முறைக்குமிடையில் ஆழமான இடைவெளி காணப்படுவது ஆழ்ந்த உண்மையாகும். காலத்தால் தோற்றுவிக்கப்படும் போலிகளும், பிற்போக்கு சக்திகள் உள்ள சகதிக்குள் வீழ்ந்து விடாது நிமிர்ந்து நிற்பாரானால் எமது சமூகத்துக்குக் கிடைத்த உண்மைக் கவிக்குளாக அருந்ததி திகழ்வார்.

உலகக்கண்ணாடி

## பங்களாதேஷில் புதியதேர்தல்.

கடந்த வருட இறுதிப் பகுதியில் பங்களாதேஷில் நடைபெற்ற பெரும் கிளர்ச்சியினைத் தொடர்ந்து சர்வாதிகாரி எச்.எம்.எர்ஷாத்திற்கு ஆதரவாக இதுவரை காலமும் செயல்பட்டுவந்த இராணுவம் கைவிரித்ததைத் தொடர்ந்து எர்ஷார்த் பதவியைத் துறந்தார். இவர் மீது ஊழல், லஞ்சம் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவ்வாண்டுபங்குனி மாதம் நடைபெற்ற 303 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்துக்கான தேர்தலில் சவாதிகாரி எர்ஷாத்தின் ஜாதிக கட்சி 35 இடங்களையும் 81ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி ஷியாவுர்ரஹ்மானின்மனைவியா காலீதா ஷியாவின் ஏழுகட்சிக் கூட்டணி ஒன்றை அமைத்ததினூடாகபங்களாதேஷ் தேசியக் கட்சி அதிகப்படியான 140 இடங்களையும், திருமதி ஹஸீனா வஜீத்தின் எட்டுக் கட்சிகள் கொண்ட கூட்டணி ஒன்றை அமைத்ததினூடாக அவாமிலீக் கட்சி 84 இடங்களையும் பெற்றுக் கொண்ட முக்கிய கட்சிகளாகும். திருமதி காலீதா ஷியா ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். ஜனநாயகத்தை நிர்மாணிக்கவும், கல்வி நிலையை சீர்செய்யவும், தேசியவருமானத்தை அதிகரிப்பதற்கும் மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகமக்கள்கருதுகின்ற போதும் பங்களாதேஷின் நிரந்தரமான ஆட்சியைத் தீர்மானிப்பது ஏகாதிபத்தியமும் அதன்நலன்களை பேணமுயலும் பங்களாதேஷ் அதிகாரத்துவமுமே.



படிப்பகம்

# என் சிங்களத்துக் காதலிக்கு...

[illegible]

பிரகலாதன்

மெல்லிய தூறல்கள் விழுந்த
அந்த மழைக்காலம் தனை
எண்ணிப்பார்க்கிறேன்
கூதல் அளிக்கின்ற
பச்சை மலைகள்
நாற்புறமும்
அரணமைக்கக் கிடந்த
கண்டியழகைக் கண்டு
வியந்தேன்.
அது கூடக் கடுகளவு
வியப்பாகப் போனது கண்ணே
உன் அழகை நான்
முதல் முதல் பார்த்தபோது
நீ
கொச்சைத் தமிழ்
பேசிய போதும்
உன் நாவினின்று வந்த
அந்தத் தடுமாறிய தமிழ்
எனக்கு இனித்ததே.

அந்த நாட்களை நான்
அசைபோட்டுப் பார்க்கிறேன்.
பள்ளி விடுமுறையில்
கண்டிக்கு வந்த நான்
திரும்பி வந்தபோது
ஏதோ வொன்று
என்னிடம்
குறைந்திருந்ததே
இருப்பினும்
நெஞ்சில் உன்னை நான்
சுமந்து வந்ததால்
உள்ளே கனத்தும்
இருந்தது.

உன்னிடம் பழகிய
அந்த நாட்களில்
நீ
அடிக்கடி என்னைக்
கேட்டாய்
தமிழர்கள்
பயங்கரவாதிகளா என்று
இதனைக் கேட்டு
உன் அறியாத் தனத்தையும்
சிங்கள அரசியல்வாதிகளின்
தப்புப் பிரச்சாரத்தினையும்
புரிந்து கொண்டேன்.
மெல்லியதாக சிரித்தபோது
ஏன் என்று கேட்டாய்
நான் உனக்குப் பயங்கரமானவனா
எனக் கேட்டேன்.

நீயுன் அறியாமையை உணர்ந்து
நிலம் நோக்கித்
தலையசைத்தாய்.

பச்சை மலையடிவாரத்தில்
சிவப்புச் சூரியன்
முகிலை விலக்கி
எட்டிப் பார்த்திருந்த
அந்த மாலைப்
பொழுதினில்
உனக்கு நான்
தமிழர்கள் கதை
சொன்னேன்.
அன்று நான்
காதற்கதைகளை
ஒத்தி வைத்திருந்தேன்
அரசியல் புரியாதபோதும்
நியாயத்தினைப்
புரிந்துகொண்டாய்
சிங்களத்தலைவர்களை
ஏசினாய்
இருப்பினும்
சிங்களமக்கள் பலர்
தமிழ்க்குழுக்களால்
கொல்லப்பட்டதனைப்
பிழையென்று
சொல்லியிருந்தேன்
நீ
மௌனித்துக்
கேட்டிருந்தாய்.

மட்டக்களப்பில்
மீன்பாடுமாமே
திருகோணமலை
ஓர் அழகாபுரியாமே
யாழ்ப்பாண அழகு
எப்படியிருக்கும்
கேள்விகள் கேட்டிருந்தாய்
நான் சொன்னேன்
அழகு ஜொலித்ததெல்லாம்
அந்தக்காலம் கண்ணே
மட்டக்களப்பில்
மக்களோடு சேர்ந்து
மீன்களும் அழுகின்றன
திருகோணமலையின் அழகில்
இரத்தத்தூசுகள்
படிந்து விட்டன
யாழ்ப்பாண நகரம்
எலும்புக்கூடுகள் நிறைந்த
சுடுகாடாய் உள்ளது

என் கவலை வாய்வழியே
வார்த்தைகளாக வந்தன
அதைக் கேட்டு
உன் கவலை
கண்கள் வழியே
வடிந்தனவே
என் சிங்களத்துப் பெண்ணே
அங்கே நாங்கள்
இரு இனங்களாகவா
பிரிந்திருந்தோம்

அன்று என் மாமன்
ஊருக்குத் திரும்ப வேண்டும்
எனச் சொல்லியபோது
என் இதயம் ஒருமுறை
நின்று துடித்ததே
செல்லுமுன் உன்னைக்காண
முன் வீட்டுப் பையனிடம்
சேதி சொல்லியனுப்பினேன்.

புத்தர் கொலுவிருக்கும்
மண்டபத்தின் பின்னால்
கண்ணீர் ஆறாய் ஓட
என் கரம் பற்றி அழுதாய்
என் நாவினின்று
ஆறுதல் வார்த்தைகள்
வந்தபோதும்
என் கண்களும் பணிந்தனவே
எம்மைப் பிரிக்கவந்த
அந்த நேரத்தினை
நான் நொந்துகொண்டேன்.
பிரிய முடியாமல் நான்
விடைபெற்றேன்
அந்த நோவினை இன்னும்
நான் உணர்கிறேன்.

திரும்பி வருவேன்
எனச் சென்ற நான்
அரசியல் வெள்ளத்தில்
அமைப்பொன்றில் சேர்ந்தேன்
காதலை இதயத்திலும்
கடமையைத் தோளிலும்
சுமந்த வண்ணம்
காடுகளும் நகரங்களும்
கடல் என்றும் அலைந்தேன்.
இன்னும் அலைகிறேன்
என் இனத்துக்கு விடிவும்
என் அலைச்சலுக்கு முடிவும்
நிச்சயம் வருமென்று
இன்னும் காத்திருக்கிறேன்
அப்போது
அந்தப் பச்சை மலைநோக்கி
ஓடோடி வருவேன்
உன்னை நான்
காண்பேன் எனத்
துணிச்சலான நம்பிக்கை
இன்னும் நான்
கொண்டுள்ளேன்.

==============================

# உலகக்கண்ணாடி-7

## எல்சல்வடோரில்

### வளரும் அரசியல் மாற்றம்

எல்சல்வடோரில் ஆட்சியதிகாரத்தில் இருந்துவந்த அரேனாகட்சி தொடர்ச்சியான பல பின்னடைவுகளை சந்தித்து வருகின்றது. கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தல் ஒன்றில் அரேனாகட்சி படு தோல்வியடைந்ததுடன் இடது சாரி கூட்டுமுன்னணியிலுள்ள (F. M.) கட்சிகளில் ஒன்றான மாக்சிய தேசிய ஜனநாயகக் கட்சி 52% மான அதாவது 2.15மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளனர்.

இடது சாரிப்பாராளுமன்ற கட்சிகள் கடந்த 1982ம் ஆண்டே இறுதியாக தேர்தலில் போட்டியிட்டனர். இம்முறை இடது சாரி ஐக்கிய முன்னணி (F. M.)யின் அரசியல் வேலைகளினால் படுதோல்வியை சந்தித்திருக்கும் அரேனாக்கட்சியின் எதிர்காலம் அபாயகரமானதே. இவர்களின் ஆட்சிக்காலத்தில் எல்சல்வடோர் தொடர்ந்தும் மனித உரிமைமீறல்களில் உலகில் முன்னணி நாடுகளாகத்திகழும் நாடுகளில் ஒன்றாகத்திகழ்கிறது.

இடது சாரி போராளிகளான FLMNஇயக்கத்தினர் 1979ம் ஆண்டிலிருந்தே தேர்தலைப்புறக்கணித்து வருவதுடன் சர்வாதிகார ஆட்சிக்கெதிரான போராட்டத்தையும் உக்கிரப்படுத்தி வந்தனர். ஆனால் இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக கியூபாவும் நிக்கரகுவாவும் செயல்பட்டு வந்தன. ஆனால் தொடர்ந்தும் கியூபாவிடமிருந்து உதவிகள் கிடைக்குமா என்பது சந்தேகம் தான்.

www.padippakam.com

# தமிழீழம் சாத்தியமா ?

புத்திரன்.

அரசியல் வாதிகளின் கைகளிலிருந்து ஆயுதம்தாங்கிய இளையதலைமுறைகளின் கைகளுக்கு தமிழ்பேசும் இனத்தின் போராட்டம் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. சமூகப்பார்வையும் தூர நோக்கும் அரசியல் விவேகமும் இல்லாது இவர்கள் போராட்டத்தின் பெயரால் மக்களை அலைக்கழித்துக்கொண்டார்கள். இந்த ஆயுதப்போராட்டம் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வை ஈழம் என்ற உச்சக்கட்ட நிலைக்குக் கொண்டு போனாலும் அவர்களுக்கான சுயநிர்ணய உரிமையைத்தானும் அங்கீகரிக்கும் நிலைக்கும் அரசைப் பணிய வைக்கமுடியவில்லை.இதற்கான காரணிகளாக ஐக்கியமின்மை,நேச சக்திகளைப் பகைத்தமை, ஆயுத வியாபாரம், இந்தியப் பகைமை,சர்வ தேச நிலைமை என்பன எதிரிக்கு சாதகமான நிலைகளைத் தோற்றுவித்து அவனை வெல்ல முடியாத நிலைக்குக் கொண்டு வந்துள்ளதால் இன்று தமிழ் ஈழம் சாத்தியமா? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் வரலாறு சேர் பொன்.இராமநாதன் காலத்திலிருந்து புலிகளின் தலைமை வரை சுரண்டும்,ஒடுக்கும் வர்க்கத்தின் நலன்களைப் பேணும் முதலாளித்துவத்தலைமைகளுக்கு கிரீடம் வைப்பதாகவே இருக்கின்றது.மக்கள் இத் தலைமைகளின் சிறப்புக்களையும்,திறமைகளையும்,பெருமைகளையும் பேசுவதற்கு அணிதிரண்டார்களே அன்றி தங்களுடைய அபிலாசைகளை,உள்ளுணர்வுகளை வெளிக்கொண்டு வருவதற்காக ஒன்று படவில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கல்வித்திட்டத்தில் தரப்படுத்துதல் புகுத்தப்பட்டு இளைஞர்களின் உயர் கல்வி வாய்ப்புக்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.இத்தடையினால் வேலை வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டன. வேலையின்மையின் விளைவு பொருளாதாரச் சீர்கேட்டையும் வாழ்க்கைத் தரத்தையும் பாதித்தது.இதனால் மத்திய வர்க்கத்தைச்சேர்ந்த இளைஞர்களின் சிந்தனைகள் வேறு திசைக்கு மாற்றப்பட்டன.இதற்கு ஏற்றாற்போல் அக்காலத்திய அரசியல்கொள்கைகளும் நடவடிக்கைகளும் அமைந்தன.இதற்கு ஏற்றாற்போல் தமிழ் அரசியல் வாதிகளும் இவர்களின் செயலூக்கத்திற்கு மறைமுக ஆதரவுகளை நல்கினார்கள்.இவ்வாறு ஆரம்பிக்கப் பட்ட மத்தியதர வர்க்க குணாம்சம்கொண்ட இளைஞர்களிடம் உழைக்கும் மக்களின் உந்து விசையுடன் கூடிய ஒரு போராட்ட சக்தியாக பரிணமிக்க முடியவில்லை. அப்படியான உழைக்கும்மக்களின் சமூகத் தட்டுமானங்களை அவர்கள் எட்டிக் கூட பார்க்கவில்லை.அப்படியான சிந்தனைகளை உடையவர்கள் இருந்தாலும் போராட்ட தலைமை வகிக்கவேண்டிய அணி போராட்டத்தில் பங்கு பெறாமலே போராட்டம்வளர்ச்சி பெற்றது போன்ற தோற்றத்தைப்பெற்றது.இந்தத் தோற்றப்பாட்டிற்கு அரசியலை விட ஆயுதமே உதவியது.இந்தஆயுதமே ஈழக்கோரிக்கையின் உயிர்நாடியாக வளர்ந்தும் விட்டது. தமிழ் பேசும் மக்களுக்கான விடுதலை,மக்களை அணிதிரட்டிய மக்கள் போராட்டமாக மாறாமல் ஆயுதங்களையும் அவைகளைக் கையாளும் ஆட்களைத்திரட்டிய ஆயுதக் குழுக்களிடமும் சரண் அடைந்து கொண்டது.இந்த ஆயுத மேலாதிக்கமே ஐக்கிய இன்மையைத் தோற்றுவித்தது.

மதத்தால்,கலாச்சாரத்தால்வேறுபட்டு மொழியால் ஒன்றாய் இருந்த மக்களும் சரி,சாதி முறையால் கூறுபட்டு, உழைக்கும் வர்க்கம் என்ற அடிப்படையிலோ, விகிதாசாரத்தின் வாழ் நிலைப்புள்ளியின் கீழ்க்கோட்டிலிருந்த மக்கள் என்ற அடிப்படையிலோ போராட்ட நோக்கங்கொண்டு ஆயுதபாணிகளாகிய இயக்கங்களின் நிலையிலோ சரி ஐக்கியம் என்பது அறவே பேணப்படவில்லை.இந்த ஐக்கியமின்மைக்கு மாவட்ட, பிரதேச வேறுபாடு நிறைந்த குடாநாட்டுச் சமூகக் கட்டுக்கோப்பும், முதலாளித்துவ நலன்பேணும் ஆயுத மேலாதிக்கம்கொண்ட இயக்க வெறியுமேயாகும். இந்த ஆயுத பலத்தின் பரீட்சையில் விடுதலைக்காகப் போராடவந்த இயக்கங்கள் ஒவ்வொன்றாகப் பலிக்கடாக்களாக்கப்பட்டு பலி எடுக்கப்பட்டன. இவைகள் முடிய இவ்வாயுதமேலாதிக்கம்அப்பாவி

www.padippakam.com

மக்கள் மீதும், சிறுபான்மை இனக்குழுக்கள் மீதும் செலுத்தப்பட்டன. ஒன்றுபட்டு ஓரணியில் நின்று போராட வேண்டிய தமிழ் பேசும் தேசிய இனமான சிறுபான்மை இனங்கள்(தமிழ்-முஸ்லீம்) தம்முள்ளே மோதிக்கொண்டன.இதனால் விடுதலைப்போராட்டம் இலக்குத்தவறி தங்களுக்குள்ளேயே எதிரி காட்டத்தொடங்கியுள்ளது. 1995-96 முற்பகுதியில் கோட்டையை விட்டு நகர முடியாது இருந்த இலங்கை இராணுவம் இன்றுகோட்டையை இழந்த நிலையிலும் எங்கு வேண்டுமானாலும் நகரக்கூடியநிலைக்குத் தன்னைப் பலப்படுத்திக் கொண்டதா? அல்லது விடுதலைப்போராட்டத்தை பலவீனப்படுத்திக்கொண்டதா?இப்படியான இச் சூழலில் தமிழ் ஈழம் இன்று சாத்தியமா

இந்த ஐக்கியமின்மையால் நேசசக்திகளாக வளர்த்தெடுக்கப்பட இருந்த முஸ்லீம்கள், தோட்டத் தொழிலாளர் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கும் சிங்கள அரசியல் கட்சிகளினதும் அதன் ஆதரவாளர்களினதும் வெளிப்படையான ஆதரவுகளுக்கும் அங்கீகாரங்களுக்கும் ஆப்பு வைத்தாற்போல்.இயக்கக்கொலைகளும் சிங்கள மக்களைக் கொன்றசெயல்களும் முஸ்லீம்களைக் கொன்றதும்.யாழ்ப்பாணத்தை விட்டுத் துரத்தியதும் ஆகிவிட்டது

வடக்கு கிழக்காய் பரந்திருந்து நேசசக்திகளாய் தோளோடு தோள் நின்று போராடவேண்டிய முஸ்லீம்மக்கள் இன்று தங்களின் தனித்துவத்திற்கும், தங்களின் சுய நிர்ணய உரிமைக்காகவும் தமிழ் பேசும் மக்களுக்குள்ளேயே போராட வேண்டிய ஒரு நிலையை இந்த ஆயுத மேலாதிக்கமும் அதன் வழிச்செல்லும் ஈழப் போராட்டமும் தோற்று வித்துள்ளது. இதே போன்று நாளை தோட்டத் தொழிலாளர்களும் தமக்கென ஒரு தனியான போராட்டத்தை தாமே நடத்த வேண்டுமென்ற கருதுகோளுக்கும் இடம் வைத்துள்ளது.

சிறுபான்மை இனங்களுக்கு மேல் நடைமுறைப்படுத்தப்படும் பொது எதிரியின் ஒடுக்கு முறைக்கு எதிராக ஓர் அணியாக நிற்க வேண்டிய நேசசக்திகள் தமது சுய கௌரவத்திற்கும் தனித்துவத்திற்கும் தனித்தனியாகப் தங்களுக்குள் போராட வேண்டிய நிலை தோற்றம் பெற்றதால் எதிரிக்கு அரசியல் ரீதியான பிரச்சினை அறவே இல்லாது போய் விட்டது இந்நிலையில் ஈழம் எப்படிச் சாத்தியமாகும்? அப்படியானால் இவர்களின் பிரச்சினைகள் மீண்டும் தோற்றம் பெற வாய்ப்புண்டுதானே என்ற கேள்விக்கு இடம் இருக்கிறது.இந்தநேச சக்திகளின் பிரச்சினை அரசியல் பிரச்சினை.இப்பிரச்சனை புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பின் அடிப்படையிலும் தீர்க்கப்படவேண்டியவை. விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொருவரும் மற்றவரின் சுதந்திரத்திற்கான உத்தரவாதத்தை உறுதி செய்ய வேண்டும். அப்படிச்செய்யத் தெரிந்து கொண்டால் புரிந்துணர்வின் அடிப்படையில் இவர்களின் பிரச்சினைகள் அணுகப்பட்டு தீர்க்கப்படும்.

ஆயுத பலத்தால் எதிரியைப் பணிய வைக்கவேண்டும் என்ற முயற்சியினால் ஆயுத உற்பத்தி விற்பனை நாடுகளிடம் விடுதலைப் போராட்டம் அடைவு வைக்கப்பட்டுவிட்டது.ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளின் சதிவலைக்குள் போராட்டம் சிக்குண்டுவிட்டது. ஆயுத மோகத்தால் என்ன செய்கின்றோம் என்பதையே இந்த விடுதலைஇயக்கங்கள் மறந்து விடுகின்றன. ஆயுதக் கொள்வனவுக்குத் தேவைப்படும் பணத்தை ஈடு செய்ய சமூக விரோத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.மனித சமூகத்தின் புற்றுநோயாக இருக்கும் போதை மருந்துகளைச் சட்ட விரோதமாகக் விற்று அதிலிருந்து கிடைக்கும் பணத்தில் ஆயுதங்களைப் கொள்வனவு செய்து வருகிறார்கள். ஒரு சமூகத்தை அழித்து இன்னொரு சமூகம் விடுதலை தேடும்விந்தையான போராட்டநுணுக்கத்தை என்னென்பது.இந்த ஆயுத பலத்தை பெருக்கவும் நவீன ஆயுதங்களைப் பெறவும் அவற்றைக் கையாளும் போர்ப் பயிற்சிகளுக்கும் இந்த ஆயுத உற்பத்தி நாடுகளின் முதலாளித்துவ சக்திகளும் தரகர்களும் தங்களையும் நல்ல மனிதர்களாக்கி உதவமுன் வந்து விடுகிறார்கள். அவர்களின் உண்மை நோக்கம் வியாபாரம்.இந்தவியாபாரம் நிலைப்பதற்கு போராட்டங்கள் நீடிக்கவேண்டும்.அவ்வாறு நீடிப்பதனால் அவர்களின் லாபக்கணக்குகள் விரிவடையும்.இவர்கள் போராடும் அரசுக்கும் அதே வேளை விடுதலை அமைப்புக்களுக்குமே தங்களின் யுத்த தந்திரங்களையும் ஆலோசனைகளையும் இலவசமாக நல்கி தங்களின் மீது இவர்களைத் தங்கி நிற்கச் செய்கின்றார்கள்.

இவ்வாறான ஆயுத வியாபாரச் செயலையும் அதன் அசிங்கத்தையும் விடுதலைப்புலிகளும், மொசாட் உளவுப் பிரிவும் செய்ததாகப் பத்திரிகைச் செய்திகள் வெளிவந்ததை யாவரும் அறிந்திருப்பீர்கள். இவ்வாறான ஒரு கட்டமைப்பின் கூட்டுச்செயலில் ஈழப் போர் நீள நீள குண்டுவிமானங்கள் தாழப்பறக்கும், மண்டைஓடுகள் ஆயுதங்களுக்காகப் பண்டமாற்றுச் செய்யப்படும் வியாபாரமே எதிர்காலத்தில் நடைபெறும். தமிழ் ஈழம் எப்படிச்சாத்தியமாகும்.

இலங்கை இந்தியாவின் தென் பகுதியில் தமிழ் நாட்டுக்கும் தெற்கே இந்து சமுத்திரத்தில் அமைந்திருப்பது எவராலும் திட்டமிட்டுச் செய்யப்பட்டதல்ல. இவ்வாறு இவ்வமைவு தவிர்க்க முடியாதது போன்று இந்திய மக்களின்ஆதரவும்தவிர்க்கப்படமுடியாததே. இந்தியஅரசு முதலாளித்துவ அரசாக இருக்கலாம். அதன் ஆட்சியாளர்கள் அதன் வர்க்க நலன்களைப் பேணுபவர்களாக இருக்கலாம். ஆனால் தென்னாட்டுமக்கள், அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டவர்கள் எமது போராட்டத்திற்கு எமது விடுதலைக்கான குரல் கொடுக்கும் அந்த நட்பியல்நிலை மாற்றப்படவேண்டியதல்ல. இவைகளை மாற்றுவதற்கும் சுயநலம் பேணும் அரசியல் அபிலாசைகொண்ட அரசியல் வாதிகளின் கபட நாடகங்களுக்கும் இரையுந்தாற்போல் இந்திய மக்களின் கொலைகள், சட்ட மறுப்புச்செயல்கள், ஆயுதஅராஜக நடவடிக்கைகள் இடம் பெற்றதுடன் இந்திய அரசிற்கு எதிரான போர்க்குரல் தமிழ் மக்களிடமே இருந்து வந்துள்ளமை வரவேற்கக்கூடியதல்ல.

உலகில் தோற்றம் பெற்ற சிறிய நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு நல்கி அவைகளின் போராட்டங்களை அங்கீகரித்து இராஜீக உறவுகளை ஏற்படுத்திக்கொண்ட இந்தியாவை எம் போன்ற சிறுபான்மை இனம் இராணுவ ரீதியில் பகைத்தலோ வெல்வதென்பதோ சுத்த அறிவிலித்தனம். மாறாக நட்புறவை வளர்த்து எதிரியைப் பணிய வைக்க அதற்கான எல்லாமட்டங்களிலும் விடுதலை இயக்கங்கள் பாடுபட்டிருக்க வேண்டியதே நுண்ணறிவாகும். யாரை யார் பாவிக்கின்றார்கள் என்றதிறமைக்கு சவாலான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவேண்டும். சுயநல வேட்கையும் பதவி அபிலாசையும் கொண்டவர்கள் துக்கிய எதிர்ப்பு அக்கினிக்கு தீனி போட்டதால் இந்தியாவா, விடுதலை போராட்டமா சீர் குலைந்தது. இதன் இழப்புக்கள் இந்தியாவிற்கு எந்தப் பாதிப்புக்களை, உலகிலோ மனித சமூகத்திலோ ஏற்படுத்தியுள்ளது. மாறாக நாலாவது உலகின் படையை வென்று விட்டோம் என்றவர்களே ஈழ மக்களுக்கான பிரச்சினைக்கு, இந்திய அரசு தலையிட்டு இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென்று வேண்டுதல்கள் தமிழ் ஈழம் ஆட்டம் கண்டு விட்டதையா அல்லது தலைமை தங்களுடையது தான் என்ற சுயநல நோக்கிலா என்றகேள்வி ஏன் எழாமலிருக்கிறது

சமீப காலமாக உலகில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்கள் ஆண்டுக்கணக்கில் நீண்டு போவதையே காண்கிறோம். எல்லா ஆயுதப்போராட்டங்களும், எல்லா ஆயுதந்தாங்கிய விடுதலைப்போராட்டங்களும் ஆயுத உற்பத்தி விற்பனை நாடுகளின் தயவில், அல்லது அனுசரணையுடனேயே நடை பெறுவதால் அந் நாடுகள் அப் போராட்டங்களின் வருமானத்தில் தங்கியிருப்பதால் சர்வதேச ரீதியில் இப்போராட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. சனநாயகம் சுதந்திரம் என்பதெல்லாம் உதட்டளவிலும் எழுத்துருவிலும் அல்லாமல் உலக நாடுகளாலோ, மனித உரிமைச் சபைகள், சர்வதேச சபைகளாலோ அதற்கு மேல் செல்ல முடியவில்லை. இதற்கான முதற்காரணம் உலகின் சமபலக்கொள்கை உடைக்கப்பட்டுவிட்டது. ஆயுத பலத்தில் கணிக்கப்பட்ட சமபலக்கொள்கை ஆயுத பரிகரணக் கொள்கையில் உடைக்கப்பட்டு விட்டது. இதன் விளைவாக இடது வலது என்ற அணிகளில் இடதுஅணிகளின் கடந்தகால அரசியல் நேர்மையின்மைகள் அந்நாட்டு அரசியல் இயந்திரங்களை ஆட்டம் கொள்ளச் செய்தன. மேலும் சோஷலிஸ முகாம் ஆன சோவியத் குடியரசும் அமெரிக்க வல்லரசும் ஆயுதப் போட்டியைக் கைவிட்டமையாலும் வார்சோ ஒப்பந்தம் வலுவிழந்து விடவே குபச்சேவின் சீர்திருத்தங்களை வரவேற்று முதலாளித்துவ சக்திகள் இந்நாடுகளுக்குள் தாங்கள் ஊடுருவலைச் செய்யத்தொடங்கின. இதன்பலனாக இதுவரை காலமும் விடுதலைக்காகப் போராடும் சிறிய பெரிய நாடுகளுக்கு ஆதரவு நல்கியசோஷலிஸ முகாம்களின் உறவுகளும்

www.padippakam.com

ஒத்தாசைகளும் அளித்திய நிலைமைதோன்றியது. அல்லாமலும் சோவியத்ரஸ்யா இந்தியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சினைகள், சோவியத் குடியரசின் ஆறு குடியரசுகள் பிரிந்து போகும் உரிமைப்போராட்டத்திலும் இந்திய மாநில அரசுகள், தனி அரசுகள் அமைக்கும் போராட்டங்களிலும் இறங்கியமை இந்த நாட்டின் அரசுகளை இதே மாதிரியான பிரச்சனைகளையுடைய மற்றைய நாடுகளின் விடயங்களில் தலையிடுவதிலிருந்து பின்னிற்க வைத்துள்ளது

முதலாளித்துவர்க்க நலன்களைப்பேணும் நாடுகளில் நடைபெறும் போராட்டங்களுக்கு, இச்சக்திகளுக்கும் உலக முதலாளித்துவம் தன் பங்கை பலவழிகளிலும் அளித்துவருவதாலும் இன்றைய சர்வதேச சூழலில் இது சாத்தியமில்லை.

எங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் பரமவைரியும் நீண்டகால எதிரியுமான இலங்கை அரசு தனது அரசியல் தந்திரோபாயத்தினால் உள்ளும் வெளியும் தனக்கான ஆதரவுகளைத் தேடிக்கொள்கிறது. போராட்டம் நடைபெறும் பிரதேசங்களாக வடக்கைப் பிரகடனப்படுத்தியுள்ளது. அங்கிருந்து வெளியேறும் மக்களுக்கு ஆதரவு நல்கும் வகையில் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் அகதிகள் முகாம்களை அமைக்க இடமளித்துள்ளது. அங்கிருந்து வெளியேறும் மக்களுக்கு வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தடை விதிக்காது மறைமுக ஆதரவுகளை நல்குகின்றது. அவர்களால் சொந்தக்காரர்களுக்கு அனுப்பப்படும் நிதிகளையே வெளிநாட்டுச் செலவாணியாக்குகின்றது. அதே செலவாணியை ஆயுதக் கொள்வனவுகளுக்குப் பயன்படுத்துகிறது. எங்களைக் கொண்டே எங்களை எல்லா வழிகளிலும் அழிக்கிறது. இதை விட இவர்கள் தஞ்சம் அடைந்திருக்கும் மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள அரசுகளிடம் தனது போராட்டத்திற்கான தன்சார்பான அரசியற் காரணிகளை நியாயப்படுத்தி எமது போராட்டத்தை பயங்கரவாதச்செயலாக்குகிறது. இரு வேறான தேசிய இனங்களின் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாக்கி நீண்டபோருக்கு ஆயுதஉதவி இராணுவத்தளபாடங்கள், நிவாரண உதவிகள் என்பனவற்றை வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்கிறது.

போராட்டத்தில் பரமஎதிரியாக இருக்கவேண்டிய புலிகளை இந்தியஅரசுக்கு எதிராகச் செயல்படவைத்தது. தேசமே இல்லாதவர்களுக்கு தேசிய மாயையைத் தோற்றுவித்து தன்னுடன் சேர்த்துக்கொண்டது. தமிழ் பேசும் மக்களுக்கு உதவ வந்தது இந்தியஇராணுவம் என்றதை ஆரம்பத்தில் எதிர்க்காமல், தமது சுயஇலாபங்களுக்காக மௌனியாக இருந்தவர்களையும் தன்னுடனே சேர்த்து இந்திய இராணுவத்திற்கெதிராக அவர்களைச் செயற்பட வைத்ததின் மூலம் தனது பகைவனை தமிழ் பேசும் மக்களுக்கு உதவ விடாமலே வெளியேற்றிவிட்டது.

புலிகளின் சகோதரப் படுகொலைகளுக்கு தூபம் போட்டு அதை வளர்த்தது. அவர்களின் பாதகச் செயல்களுக்கு இலக்கானவர்களுக்கும் தஞ்சம் கொடுத்து புலிகளை அழிக்க இவர்களின் உதவியையும் பெற்றுக்கொண்டது. போராட்டத்திற்கு ஆயுதத்தைத் துணையாகக்கொண்ட இராணுவத் தீர்வை தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வாகக் கொண்டது. புலிகளினால் பாதகம் இழைக்கப் பட்ட ஏனைய சகோதர அமைப்புக்களையும் அரசு தன்னுடன் சேர்த்துக்கொண்டது. இதன் மூலம் புலிகளைத்தனிமைப்படுத்தி அதன் அரசியல் வறுமையையும் தனக்கு ஆதாயமாக்கிக்கொண்டது. மக்களுக்கு அளிக்கப்படவேண்டிய அத்தியாவசிய உதவிகளையும் உணவு, வைத்திய உதவிகளையும் கட்டுப்படுத்தியது. அதன் விளைவாக புலிகள் மீது மக்கள் வெறுப்படையவும் ஏனைய இயக்கங்களுக்கு எதிராக புலிகள் பிரச்சாரங்களை முடுக்கி விடவும் இடையில் நின்று நல்ல பிள்ளை வேடம் போட்டுக்கொண்டது. இப்படி பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் அரசின் இரட்டை வேடத்தை எந்த அணுகுமுறையில் இப் போராட்ட சக்திகள் வெற்றி கொள்ளப் போகின்றன. சிங்களப் பேரினவாத இனவெறியைக் கக்கிக் கொண்டே உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதரவையும் உதவிகளையும் பெற்றுக்கொண்டிருக்கும் இலங்கை அரசை எதிர்த்து குழறுபடிகள் நிறைந்த போராட்டச் சக்திகளால் எப்படி இன்று ஈழம் சாத்தியமாகும்.

இத்தனையையும் வெற்றிகொண்ட போதிலும் இன்று இருக்கும் நிலையில் எம்மையும் இறைமையையும் தன்னாதிக்கமுள்ள அரசாக உலக நாடுகளின் சபையில்


படிப்பகம்

www.padippakam.com

முன்மொழிய ஆகக் குறைந்தது ஒரு நட்பு நாடு வேண்டும். அவ்வாறு ஏற்பதற்கு முன் எம்மை ஒரு விடுதலைப் போராட்ட சக்தியாக எந்த நாடு அங்கீகரித்துள்ளது? இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம், உலக வங்கியின் உதவிகளைப் பெற்று அபிவிருத்திகள் மேற்கொள்ள உலக வங்கி எமது நாணய மதிப்பீட்டையும் நாணயத்தையும் ஏற்க வேண்டும். எம்மை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கும் ஒரு நாடு முதலில் எமக்கு உதவுவதோடு எம்மை தனது நட்பு நாடுகளைக்கொண்டும் அங்கீகரிப்பதற்கு முனைப்புகள் எடுக்கும். இவ்வாறு உண்மை நடைமுறைகள் இருக்க, அரசியல் தீர்வுகளின் அடிப்படையிலான தீர்வுகளை ஒதுக்கிவைத்து ஆயுதத்திற்கு முன்னுரிமை கொடுத்து மக்களைத் திரைமறைவில் ஒழித்து மாயையாக தமிழ் ஈழத்தைக் காட்டுகிறார்கள்.

மேற்கூறிய நடைமுறைகளுக்கான சர்வதேச முன்னெடுப்புக்களை, எமது போராட்டத்தை உலக அரங்கில் நியாயப்படுத்தி அவைகளை ஏற்றுக்கொள்ளவைக்கும் பிரச்சாரத்திலும் ஆதரவு தரும் நாடுகளின் தயவிலும் தங்கியுள்ளது. இது பூகோளரீதியிலும் ஏற்புடையதாக இருக்கவேண்டும். எமது பொது எதிரியின் முகமூடிகள், முகத்திரைகள் கிழித்தெறியப்படவேண்டும். எதிரியை நம்பும் அளவிற்கு சகோதர அமைப்புக்கள் புறக்கணிக்கப்படுவது எப்படி?

எதிரியை நண்பன் என்று பறைசாற்றிய பலரும், விடுதலையின் பெயரால் நடந்த படுகொலைகளும் எமதுபோராட்டத்தை சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெறத்தடையாக்கிவிட்டது. இன்று தமிழ் பேசும்மக்களுக்கு தமிழ் ஈழத்தைக்காக்கும் ஆயுதப்போராட்டத்தை விட அரசியல் தீர்வே அத்தியாவசியமும், தவிர்க்கமுடியாததுமாகும். இவ்அவசியத்தேவை தவிர்க்கப்படுமானால் இலங்கையில் நீண்டகாலமாக பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் சர்வதேச முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு உதவும் கூலிகளாகவும், அகதிகளாகவும், உதிரிகளாகவும் அணிசேர முடியாது தவித்து உழலும் நிலையே வளரும்.

## உலகக்கண்ணாடி-5

## புஷ்-மிட்ரோண்ட் முரண்பாடு

அறுபத்தேழுக்குப்பிற்பாடு இஸ்ரேலிய சியோனிஸ்டுக்களால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு ஆற்றங்கரை, காஷா பகுதிகளை பாலஸ்தீன மக்களிடம் ஒப்படைப்பதும் இருபகுதிகளுக்குமிடையிலுள்ள நெருக்கடிகளை தீர்ப்பது தொடர்பாக புஷ்க்கும் மிட்ரோனுக்குமிடையில் ஆழமான முரண்பாடுகள் காணப்படுகின்றன



அமெரிக்காவின் அரபுப்பிரதேசத்துக்கான நாசகார வேலைகளைச்செய்வதற்காக வளர்த்தெடுத்த இஸ்ரேலின் நலன்களை நிராகரிக்க அமெரிக்க ஆளும்வர்க்கம் விரும்பாததின் விளைவாக பிரான்ஸின் நிலைப்பாட்டுடன் ஒத்துப்போக முடியாது என்ற கருத்தினடிப்படையில் புஷ்சின் நிலைப்பாடாகவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதி கருத்துத்தெரிவிக்கையில் பாலஸ்தீன மக்களின் பிரச்சனையைத் தீர்த்துவைப்பதில் அமெரிக்காவுக்கு முக்கிய பங்குண்டு என்றும் இப்பிரச்சினையைத் தீர்க்க முயல்வதற்கு 'ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின்' உறுப்பு நாடுகளின் உச்சி மாநாடு ஒன்றைகூட்ட வேண்டும் என்றும் மிட்ராண்ட் தெரிவித்துள்ளார்.

குவைத் மீதான ஈராக்கின் நடவடிக்கையை ஆக்கிரமிப்பு என்றும் அங்கு ஜனநாயகத்தைப்பேண அமெரிக்கா போராடி வருகின்றது என்று முழங்கிய அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு பாலஸ்தீன மக்களின் மண்ணை பலதசாப்தங்களுக்கு மேலாக ஆக்கிரமித்து வைத்திருக்கும் இஸ்ரேலின் சியோனிச நடவடிக்கைகள் முற்போக்கானவை என்றும் எதிர்காலத்தில் புஷ் அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# திணிப்பு

## சிறுகதை

கனேஸ்.

ஞாயிற்றுக்கிழமை

கோப்பைகளின் வரவு அதிகமாகவே இருந்தது.
கோப்பைகளில் இருக்கும் மீதி உணவுகளைகொட்டியவாறே கடிகாரத்தைப் பார்க்கிறான் சுரேஷ். கடிகாரத்தின் முட்கள் 11 மணியை காட்டியது. "எந்தக் குளிரென்டாலும் இந்தச்சனங்கள் இங்கை தின்றதைவிடமாட்டுதுகள்"என்றுமனதுக்குள் திட்டியவாறே கழுவலின் வேகத்தை அதிகரிக்கிறான் சுரேஷ்.

ஒருவாறு அன்றையஇரவு றெஸ்ரோரன்ட் வேலையை முடித்து வீடுதிரும்பிக்கொண்டிருந்த சுரேஷ் வீதியிலிருந்த தொலைபேசிப்பெட்டியை கண்டதும் "இலங்கையிலும் பெரியபிரச்சனை நடக்குதாம், உவங்கடதொலைபேசிச் செய்தியையாச்சிலும்கேப்பம்"என்று எண்ணியவாறே தொலைபேசிப்பெட்டியை நெருங்கும் வேளையில்,டேய் மச்சான் வேலைமுடிஞ்சுதாடா?என்றவாறே சுரேசின் நண்பன் தீபன் வருகிறான்.ஓமடா வேலைமுடிஞ்சுது அதைவிடு இலங்கையில் என்னபிரச்சனையாம்?என்று பதிலுடன்கூடிய கேள்வியையும் எழுப்புகிறான் சுரேஷ்.அது பெரிய பிரச்சனையாம் மச்சான்.எங்கடபொடியலாலதான் எங்கட சனங்களுக்குப்பிரச்சனையாம்.என்ர சினேகிதன் ஒருவன்கடிதம் போட்டிருக்கிறான். வாசிக்கிறன் கேள் என்றவாறே தெருவிளக்கின் உதவியைநாடுகிறான் தீபன்.

அன்பு நண்பனுக்கு,
ஈழத்தவர்
நலம்விசாரிக்கும்நிலையில்இன்றில்லை
இருந்தாலும்
நாமெல்லாம் ஈழத்துரோகிகளாம்.
ஈழத்தில்
இசை ஞானிகள்இன்றில்லை.
எனவே
இசைஞானம்பெற்றவர்களும்இன்றில்லை.
பதிலாக
கொலைஞானிகள் இன்றுள்ளனர்.
எனவே
கொலை ஞானம் பெற்றவர்களும் இன்றுள்ளனர்.
ஈழத்தில் தேனிசைகள் கேட்பதில்லை.
பதிலாக
அலறல்களும்,குமுறல்களும் கேட்பதுண்டு.
தேனிசைகள் மீட்கக்கருவிகள் இல்லை.
பதிலாக
துப்பாக்கிகளே இசை(பாடுகின்றன) மீட்கின்றன.
ஈழத்தில்
மக்களுக்காக மண்ணை நேசித்தவர்கள் இன்றில்லை.
பதிலாக
மக்களில்லா மண்ணை நேசிப்பவர்கள் தான் இன்றுள்ளார்கள்.
ஈழத்தில்
ஜனநாயக வாதிகள் இன்றில்லை.
பதிலாக
பாசிஸவாதிகளே இன்றுள்ளார்கள்.
இன்று இல்லாதவற்றை நேசித்தும்,
இருப்பவற்றை அழிக்கவும்,
மறுப்பவர்கள் துரோகிகளாம்.
எனவே நண்பனே
இன்று நானும் ஈழத்துரோகியாம்.
இந்தத்துரோகியின் மூச்சு இன்னும் சில காலம்தான்.
அதுவரை ஈழத்துரோகி ராசா.
ஈழத்துரோகி(ராசா)

கடிதத்தில் எழுதியிருந்தவற்றைக் கேட்டதும் சுரேஷின் சிந்தனைகள் இறந்த காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் ..........
என்ன மச்சான் கடுமையாய் யோசிக்கிறாய் பிரச்சனையை எனக்கும் சொல் என்றான் தீபன்.
இல்லைத்தீபன்என்ர தம்பி ஒருவன் இலங்கையில் நன்றாகப் படித்துக்கொண்டிருந்தான்.நான் நினைச்சன் அவன் டொக்டராக வருவான் என்று ஆனால் அவனக்கூட இவங்கள் கெடுத்துப்போட்டாங்கள். என்றவாறே தனது தம்பியின் பிரச்சனையை ஒரு கதையாகக் கூறத் தொடங்கினான் சுரேஷ்.
வெள்ளிக்கிழமை
பிரார்த்தனைக்காக மாணவர்கள் கூடியிருந்தார்கள்.பிரார்த்தனை முடிந்தபின் மாணவ முதல்வன் ஒருவனின் உரை நிகழ்வது வழக்கம்.இவ் அடிப்படையில் "இன்றைய மாணவர்களின்எதிர்காலம் என்ன" எனும் தலைப்பின் கீழ் அன்றைய உரையை ஆரம்பிக்கின்றான் குமரன்.

படிப்பகம்

www.padippakam.com

மாணவப் பருவம் என்பது மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய படிக்கல்லாகும்.
மாணவப் பருவம் என்பது பால பாடத்தில் தொடங்கி பட்டப்படிப்புக்கள், பயிற்சிகள் என்று ஆழ்கடல் போலத் தொடர்ந்தே செல்லும். இதற்கு வயது, ஜாதி, மொழி,மதம்கிடையாது.

ஆனால் எமது இன்றைய மாணவர்களின் எதிர்காலம் வினாக்குறியால் எழுதப்பட்டதாகவே காணப்படுகிறது. ஒரு புறம் விடுதலைப்போராட்டம்,மறுபுறம் சுயநலவாத அரசின் தரப்படுத்தல்கள். இதற்கிடையே மாணவர்களைக்கல்வி அறிவற்ற நெறியில்லாக்களாகமாற்றப் பிரச்சாரங்கள்.இப்படிப்பட்ட பலஇடர்புகளால் சூழப்பட்ட ஒரு கதம்பமாலையாகவே காணப்படுகிறது.இன்றைய ஈழ மாணவர்களின் நிலை?

மாணவர்களே!
உங்கள் இலட்சியம் என்ன? குறிக்கோள் என்ன? என்பதனை நீங்களே உங்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.
எமது நாட்டை,எமது இனத்தைக்காப்பது எமது கடமை,எமது இலட்சியம் என்பதனை மறந்துவிடக்கூடாது.

ஆனால்
இன்றைய சிலமாணவர்கள் சுய நலவாதக் குழுக்களின் மாயவலையில் சிக்கி தமது எதிர்காலத்தை மட்டுமல்லாது, நாட்டின் எதிர்காலத்தை மட்டுமல்லாது நிகழ்காலத்தையே மாற்றி வருகிறார்கள்.

தொட்டதற்கெல்லாம் ஊர்வலம், கடையடைப்பு, பாடசாலை பகிஷ்கரிப்பு. இதனால் யாருக்குலாபம்? சில சுய நலவாதக்குழுக்களுக்கே தவிர வேறு யாருக்குலாபம் சற்றுசிந்தியுங்கள் மாணவர்களே!

அன்று லெனின் அறை கூவல் விடுத்தார், மாணவர்களே,இளைஞர்களே கற்க முன்வாருங்கள் என்று ஆனால் இன்றைய எமது மாணவகளோ காற்றோடு காற்றாக மண்ணோடு மண்ணாக மறைந்து வருகிறார்கள்,ஆம் அவர்கள் எமது இனத்தின் விடிவுக்காக,எமது மக்களின் உரிமைக்காக போராடியவர்கள்தான். ஆனால் அவர்கள் கற்ற கல்வியை முற்று முழுதாக கற்று அதன்மூலம் புத்தி ஜீவிகளாகி எமது நாட்டிற்கும்,எமது இனத்திற்கும் பெரும் சேவை ஆற்றியிருக்கலாம்.

அன்றைய இந்திய சுதந்திரப்போராட்டத்தில் நேருவுடன் மகள்பிரியதர்ஷினியும் போராடினாள்.ஆனால் அவள் கற்ற கல்வியைக் கைவிடவில்லை. அவள் கற்ற கல்வியே அவளைசுதந்திர இந்தியாவின் தலைவியாக்கியது."அவரே அன்னை இந்திரா"

எனவே மாணவர்களே!
யதார்த்தத்தின் நிகழ்வுகளையும் மனதிற்கொண்டு உங்கள் எதிர் காலத்தையும் நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

மாணவர்கள் விளங்கிக்கொள்ளக் கூடிய பாணியில் குமரன் எளிமையாக ஆற்றிமுடித்த உரைக்கு ஆசிரியர்களினதும்,மாணவர்களினதும் பலத்த கரகோஷம் பாராட்டாகக்கிடைத்தது.
இருநாள்இடைவெளிக்குப்பின் பாடசாலைக்கட்டிடங்கள்மீண்டும்மாணவர்களின் சித்திரவதைகளைத் தாங்கிக் கொண்டன.
ஆனந்!
என்ன மச்சான் கை, கால்கள் எல்லாம் காயங்கள் என்று குமரன் கேள்வியெழுப்ப....

மச்சான் நீ வெள்ளிக்கிழமை இயக்கத்துக்கு போகக்கூடாது என்று பேசினியாம்.உன்னை என்டு நினைச்சு ஆள்மாறி எனக்குச்சாத்தி விட்டாங்கள்.நீ எங்காவது ஓடிப்போய்விடு. இல்லாவிட்டால் உவங்கள் மண்டையிலும் போடத்தயங்கமாட்டாங்கள் என்றவாறே கண்களைக் கசக்கினான் ஆனந்.

இதைக்கேட்ட குமரன் அதிர்ச்சியடைந்தான். மாணவர்களின் சுதந்திரமான கருத்துப்பரிமாறல்களையே ஜீரணிக்க முடியாத இவர்கள் தான் ஈழ விடுதலையை வென்றெடுக்கப் போகிறார்களாம்.....? என்று மனதுக்குள் சிரித்தவாறு தனது இருக்கையில் அமர்ந்தான் குமரன்.

பாடசாலை முடிந்து மாணவர் கூட்டம் முண்டியடித்துக்கொண்டு வெளியேறுகிறது.கூட்டத்துடன் கூட்டமாக குமரனும் வெளியேறும் வேளையில் குமரன்!கொஞ்சம் இங்கவாருங்கோ எனும் குரலொன்று வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பஜிரோ ஜீப்



படிப்பகம்

www.padippakam.com

பிலிருந்து வெளிப்படுகிறது.

ஜீப்பைப்பார்க்கிறான் குமரன். ஆம், அந்தஜீப்பினுள் இருப்பவர்கள் இயக்கப் பொடியள்என்று பலராலும் அழைக்கப் படுபவர்கள் தான்.

குமரனின் வரவைக்கண்ட பஜீரோ ஜீப் கதவுகளை அகலத்திறந்து ஏறுவதற்கு வழிகொடுத்தது.மீண்டும் பழைய நிலையைஅடைந்த ஜீப்விரைந்து சென்று முகாமினுள் நின்றது.

முகாமினுள் இருந்து புன்சிரிப்புடன் ஒருவர்•இவர்தான் எமது பிராந்தியப் பொறுப்பாளர் பசீர்•என்று குமரனுக்குப் பசீரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

தனி அறை
குமரன், பசீர் இருவரும் மட்டுமே. பசீரின் செந்தமிழ்(அனாகரீக)வார்த்தைகள் தொடர்கின்றன......
குமரன் உம்மைப்பற்றி எல்லாவற்றையும் நான் முன்பே அறிந்துள்ளேன். உமக்கு மேடைப்பேச்சு ஆற்றல் இருப்பதாகவும் அறிந்தேன்.இவ்வளவு நாட்களும் உங்கள் நடவடிக்கைகளில் ஏற்படும் தவறுகள் உங்களை மட்டுமே பாதித்திருக்கும். ஆனால் எனி நீங்கள் செய்யும் காரியங்களில் ஏற்படும் தவறுகள் உங்களை மட்டுமல்ல,எமது இயக்கத்தையே பாதிக்கும்.

விளங்கியிருக்கும் என நினைக்கிறேன். இன்றிலிருந்து நீங்களும் எமது இயக்க உறுப்பினர்களுள் ஒருவராகிறீர்கள். நீங்கள் இனி மேல் எம்மவர்.

நான் கூறியவற்றில் உமக்கு ஏதும் ஆட்சேபனையிருப்பின் எமது கண்களுக்கு நீரும் ஈழத்துரோகியாகவே தென்படுவீர்.
இவ்வாறு தனது வார்த்தைகளை இலகுவாக முடித்துக்கொண்டார் பிராந்தியப்பொறுப்பாளர் பசீர்.

செய்வதறியாது திகைத்த குமரன் மௌனமாக சம்மதிக்கும் சைகையை காட்டினான்.

சரி,குமரன் இப்ப எங்கட ஆட்கள் உம்மைக்கொண்டுபோய் விடுவினம் வருகிற கிழமை ஒருக்கா என்னைசந்தியும் எனக்கூறி தனது இயக்க மொட்டை ஜீப்பில் ஏற்றி அனுப்பினான் பசீர்.

குமரனும் தமதுஇயக்கத்தில் ஒருவர்தான் என்பதை ஊருக்கு விளம்பரப்படுத்தும் வகையில் போராளிகள் எனப்படுபவர்கள் நடந்து கொண்டார்கள்.

குமரனும் இயக்கமாம்.....குமரனும் இயக்கமாம்.... ஊரிலும், பாடசாலையிலும் கதை பரவியது.மறுநாள் குமரன் பாடசாலை செல்கிறான்.அவனுக்கு மாணவர்களிலிருந்து ஆசிரியர்கள் வரைக்கும் இவ்வளவு காலமும் இல்லாததுபோல் பயத்துடன் கூடிய மரியாதை கொடுப்பதை அவனால் உணரமுடிந்தது.

சிலநாட்களின் பின்,
பாடசாலை, வீடு என எல்லா இடமும் இராணுவத்தினர் தேட ஆரம்பித்து விட்டனர்.
இந்நிலையில் அவனால் பாடசாலைக்கோ,வீட்டிற்கோ செல்ல முடியவில்லை.

இயக்கத்தவரின் விளம்பரத்திற்குப் பயன்கிடைத்தது.
ஆம், அவர்கள் எதிர்பார்த்தவாறே வேறு வழியின்றி குமரனும் இயக்கத்தில் சேர்ந்துகொண்டான்.

ஆம் அவனது கைகளில் இருந்து பறிக்கப்பட்ட பேனாவுக்குப்பதிலாகதுப்பாக்கி திணிக்கப்பட்டு அவனது கல்விக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

தனது சகோதரன் குமரனைப்பற்றி தனக்குத்தெரிந்தவற்றை கூறி முடித்த சுரேஷின் கண்களிலிருந்து சிந்திய நீர் பனிக்கட்டிக்கு ஒரு பொட்டு வைத்தது.

### வெகுஜனமாக திரண்டிடும்

சோகம் நிறைந்த
என் நெஞ்சில்
மக்களின் விடுதலையில் தாகமுண்டு
திட்டங்கள் தீட்டி
என்னை நசுக்க நினைக்கும்
மனித மிருகங்கள்
எம் நாட்டில் இருக்கும்வரை
உரிமைப் போராட்டம்
உருக்குலைந்தே இருக்கும்
ஆயிரமாயிரம் தோழர்களின்
கனவுகள் •வெகுஜனமாக
திரண்டிடும் •காலம்
வெகு தூரமில்லை.

பி.குலம்.


படிப்பகம்



பழ-கருப்பையா.

# குறிஞ்சிக் குறைகள்

தோட்டத் தொழிலாளர்களை பச்சை யானைக்குள் அடைவு வைத்து ஐக்கிய தேசியக்கட்சிக்கு தாரைவார்த்துக் கொடுத்துள்ள மலையக மக்களின் மாண்புமிகு தலைவர் தொண்டமானும் அவரது கூட்டமும் உள்ளூர் ஆட்சித்தேர்தலில் தாம் போட்டியிட்ட இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றுவிட்டதாக வீரப்பிரதாபங்களை அளந்து வருகின்றனர். மலையக மக்களை எத்தனை இனக் கலவரங்களில் யூ.என்.பி. குண்டர்கள் தாக்கினாலும் தமக்கு வாக்களிக்கப்பண்ணி வெற்றி பெறப்பண்ணியமைக்காக யூ.என்.பி. பொதுச் செயலாளர் தொண்டமானுக்கு நன்றி தெரிவித்துள்ளார். உள்ளூர் ஆட்சிச் சபைகளே ஒழுங்காக மலையகத்தில் இயங்குவதில்லை. அதன் பலன் மக்களுக்கு கிடைப்பதில்லை. இந்நிலையில் மலையகத்தில் உள்ளூராட்சித் தேர்தல் என்பது வேடிக்கையானது.

பரந்து கிடக்கும் தோட்டப்பகுதிகளின் எல்லைகளிலேயே கூடுதலான கிராமங்கள் அமைந்துள்ளன. ஆனால் இக்கிராமங்களை விட தோட்டப்பகுதிகளிலேயே கூடுதலான மலையக மக்கள் வாழ்ந்த போதும் இவர்களுக்கான கிராமசபைகள் உருவாக்கப்படவில்லை. எல்லைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கான கிராமசபைகள் உதவி அரச அதிபர் பிரிவுகளுடனேயே தோட்டப்பகுதிகளில் வாழும் மக்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இச்சபைகள், அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை. அதனால் அவர்களுக்கு கிட்ட வேண்டிய எந்தப் பயன்களும் கிட்டுவது இல்லை. ஆனால் உள்ளூர் ஆட்சிச் சபைத் தேர்தல் காலங்களில் மட்டும் இச்சபைகளுக்கான மக்கள் வாக்களிக்க வேண்டியுள்ளது. இது ஒரு நவீன நாகரீக ஏமாற்று வித்தை. இதற்கெதிராக மலையக மக்களை கிளர்ந்தெழச் செய்ய வேண்டும்.

[illegible]

## சோவியத்யூனியனின் எதிர்காலம்

அண்மையில் சோவியத் யூனியனில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் முடிவுகள் கோர்பச்சேவ்வின் கொள்கைக்கும் நோக்கத்துக்கும் கிடைத்த வெற்றியே என பலர் கருதுகின்ற போதும் தேசியவாத சிந்தனை கொண்ட சக்திகளின் மனங்களில் எதுவித பாரிய மனமாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதையே சர்வஜன வாக்கெடுப்பின் பின் தொடரும் சம்பவங்களை வைத்து உணரக்கூடியதாகவுள்ளது. இவ்வாக்கெடுப்பில் [illegible] கோடியே 21 இலட்சம் மக்கள் அதாவது [illegible] மான மக்கள் கோர்பச்சேவ்வின் சமத்துவமான குடியா[illegible]திபத்தியமுடைய குடியரசுகளில் (சோவியத்) புதிய யூனியன் ஒன்றை உருவாக்குவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ள போதிலும் தேசியவாத சிந்தனை வளர்ந்துள்ள 6 குடியரசுகள் இவ் வாக்கெடுப்பை நடாத்த மறுத்துவிட்டதுடன் உக்ரெய்னின் குடியரசில் நடைபெற்றுவரும் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது

கோர்பச்சேவ்வின் கொள்கைக்கு முரணான நிலைப்பாட்டையும், அமெரிக்க மற்றும் மேற்குலக ஆளும் வர்க்கங்களின் நலன்களைப் பேணும்வகையில் செயல்படுபவருமான ஜெல்ட்ஸின் கோர்பச்சேவ்வின் அதிகாரத்தை தான் கைப்பற்றுவதற்காக பலவகையான சதித்திட்டங்களுடன் செயல்பட்டுவரும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சோவியத் யூனியனின் எதிர்காலம்?

www.padippakam.com

# சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல்

ஆனா

பானை வயிற்றைத் தனது கூழங்கையால் தடவியவாறு கொம்புப்பல்லு விழுந்த முரசு தெரியிறவாறு சிரித்துக்கொண்டு. ஒற்றைக்கையால் நாலுமுழத் தலைப்பை தூக்கிப்பிடித்துக் கொண்டு தாண்டித் தாண்டி நடந்து வந்தார் பிள்ளையர்.

வாரும் பிள்ளையர் என்ன சந்தோஷமாய் இருக்கிறீர். இரண்டு மாதங்களுக்கு பிறகு சந்திக்கிறம். வயிற்றை தடவுறீர் ஏதும் வயித்திலை சுகமில்லையோ.

சீ வாத்தியார் அது ஒண்டுமில்லை என்று நெளிந்த பிள்ளையர்.

வாத்தியார் நீண்ட நாளைக்கு பிறகு வடை. பாயாசத்தோட சாப்பிட்ட மாதிரி இண்டைக்கு ஒரு புடிபுடிச்சன் அது தான் என்று சொல்லி அசடு வழிந்தார்.

ஏன் வீட்டிலை ஏதும் விசேசமோ பிள்ளையர்.

இல்லை வாத்தியார் மட்டக்களப்புக்கு போனதிலை இருந்து ஆற அமர இருந்து இரசிச்சு ருசிச்சு சாப்பிடேல்லை. அது தான் இண்டைக்கு நாலு மீன் கருவாடு செதிலைப்போட்டு (கருவாடு எங்கை கிடைக்கிறது என்று பிள்ளையர் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.) ஒரு ஒடா வடித்தண்ணியாய் குழம்பொண்டு வைச்சு கறி முருங்கை இலையிலை ஒரு வறையும் வறுத்து ஒரு பிடி. பிடிச்சன். அதுதான் இப்போதைய வடை பாயாச விருந்து என்று சொல்லிய பிள்ளையருக்கு நாவில் சலம் சொட்டுப் போட்டது.

சரியான சாப்பாட்டு இராமன். சனம் ஒரு பருக்கை சோறுக்கு ஆலாய் பறக்குதுகள். இந்தாளுக்கு வடை. பாயாசத்தோட விருந்து கேட்குது. இரசிச்சு ருசிச்சு சாப்பிட்டன் எண்டு சொல்லுற வடிவு. என்று மனதுக்குள் திட்டிக்கொண்டார் வாத்தியார்.



அதுசரி பிள்ளையர் மட்டக்களப்பு போனீர் என்ன விசேசங்கள். உதென்ன தலையில் கட்டு.

வாத்தியார் சோளியன் கொடுத்த பரிசு இது. உவங்களை யாழ்ப்பாணத்திலை இருந்து துரத்தினது நூற்றுக்கு நூறு சரி. சோளியனின்ரை நாலுபேரை எங்கட பொடியள் தட்டிப் போட்டாங்களாம். அதுக்காக ஊர்காவல் படை என்கின்ற கோதாரியிலை போவார் கண்டவன் நிண்டவனை எல்லாம் புடிச்சுக் கொண்டு போட்டாங்கள். பதினைஞ்சு வருஷமாய் காணாத தங்கச்சியின்ரை மகளின்ரை கல்யாணத்துக்கு போன என்னையும் றோட்டிலை வைச்சு பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள். நான் விசயம் தெரியாமல் யாழ்ப்பாணம் எண்டு சொல்லிப் போட்டன். வைச்சு சாத்து சாத்தெண்டு சாத்திப் போட்டாங்கள். நிலைமை ஒழுங்காய் இருந்தால் மட்டக்களப்பார் அகற்றுச் சங்கம் ஒண்டு தொடங்கி எல்லையிலை வைச்சு அடிச்சு துரத்துவன். அதுவும் சோளியனை கால் கையை தட்டிப்போடுவன். என்ற



படிப்பகம்

www.padippakam.com

பிள்ளையர் வீரம் வந்தவர் மாதிரி நாலுமுழத்தை மடிச்சுக் கட்டிக் கொண்டார்.

எப்பவுமே மெதுவாகச் சிரிக்கிற வாத்தியார் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார். வாத்தியார் சிரிக்கிறதை பிள்ளையர் வாயைப்பிளந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார். இலையான் ஒன்று பிள்ளையரின் வாயுக்குள் புகுந்து விட்டு தப்பான இடத்துக்கு வந்து விட்டோம் என்று நினைத்து வெளியே பறந்தது.

பிள்ளையர் உங்களுக்கு அனுகுண்டைப் போட்டு அழிச்சாலும் நீங்கள் திருந்துவியளோ தெரியேல்லை. எவ்வளவுஅழிவுகள், எவ்வளவு இழப்புக்கள் இன்னுமே, பிரதேசவெறி, சாதி மத இன வெறி உங்களை விட்டுப் போனபாடில்லை. மனிதநேயம் உங்கட பக்கம் எட்டிப் பார்க்குதேயில்லை. வந்து பாருங்கள் உலகத்திலேயே திருந்தாத, நாகரீகமடையாத கற்கால மக்கள் நாங்கள் எண்டு சொல்லுறமாதிரி நடந்த கொள்ளுறியள்.

முதலிலை முஸ்லீம் மக்களை மனிதர் என்டு மதியுங்கோ. அவர்களை நாகரீகமாக கூப்பிட்டு பழகுங்கோ. அவர்களும் தமிழ் பேசும் மக்கள்தான் என்கிறதை நினையுங்கோ. இனிவெறி அரசாங்கத்தை வெல்லுறதுக்கு எங்களோட தோள் கொடுக்க வேண்டிய எங்கட ஒரு அங்கம் தான் அவர்கள் என்று மறக்காதையுங்கோ. ஆண்டாண்டு காலமாய் எங்களோட வாழ்ந்த முஸ்லீம்களை. எங்களோட அனைத்து வழிகளிலும் ஒத்துழைச்ச அவர்களை இயக்கங்கள் சரியாகப் பாவிக்காததாலை, அவர்களை உதாசீனம் செய்ததாலைதான் அவர்கள் தங்களுக்கெனத் தனிக்கட்சி, தனி இயக்கம் ஆரம்பிச்சவர்கள் எண்டுறதை மறவாதையுங்கோ. அது அவர்களின்ரை சுதந்திரமும் கூட. நீங்கள் அவையளை அடிக்கிறதும், தட்டுறதும். அவையள் உங்களை அடிக்கிறதும், தட்டுறதும் பிரேமதாசாவுக்கு அனுகூலமாய் போகுதென்கிறதை மறவாதையுங்கோ. செய்யிற எல்லாத்துக்கும் விளக்கமில்லாமல் சரியெண்டு தலையாட்டாதையுங்கோ.

நீங்கள் இப்ப ஆருக்கு தலையாட்டுறீங்களோ அவை உங்களை தட்டவரயுக்கை அதை தட்டிக் கேட்க ஆளிருக்காது. அப்ப யோசிச்சு பிரியோசனமில்லை. இப்ப யோசியுங்கோ நான்வாறன். வாத்தியார் சந்தைக்கு கிளம்பினார்.

# வெகுஜனம்

அரசியல், இலக்கிய,
கலாச்சார இதழ்.

காலம் - இரு மாதங்களுக்கொரு முறை வெளிவருகிறது.

ஆசிரியர் - வெகுஜனம் குழு.

ஓவியம் - ரி. தாசன்.

இலங்கை நிருபர்- கு. புத்திரன்.

சந்தா - வருடமொன்றுக்கு இருபது டி. எம்.

தனி இதழ் - மூன்று டி. எம்.

வெளியீடு -

VEKUJANAM PUBLICATION S
MITTWEG STR - 21
4300 ESSEN - 1
GERMANY.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கியப்படுவோம்

# போராடுவோம்

# அமைதி காண்போம்

படிப்பகம்